# குமரகுருபரர்

சைவப் பெருநாவலர்
புலவர் அ. நடேச முதலியார்

TNSDA
06676

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

# குமரகுருபரர்

சொர்ணாம்பாள் நினைவுச் சொற்பொழிவுகள்

சைவப் பெருநாவலர்

புலவர். அ. நடேச முதலியார்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அண்ணாமலை நகர்

ரூ. 2 - 40

முதற்பதிப்பு 1975
சொர்ணம்பாள் சொற்பொழிவு வரிசை 11

294.5516
BBL

6676

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.

# பதிப்புரை

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தம் அன்னையார் சொர்ணம்பாள் அவர்களின் பெயரால் நிறுவிய அறக்கட்டளையிலிருந்து வெளிவரும் இந்நூல், சொற்பொழிவு வரிசையில் பதினொன்றாவதாகும்.

இச்சொற்பொழிவிற்கு முன் எல்லையில் கம்பர், இளங்கோவடிகள், நக்கீரர், திருநாவுக்கரசர் சேக்கிழார், கொங்குவேளிர் போன்ற பெரும் புலவர்களின் இலக்கியப் படைப்புக்களை அறிஞர்கள் பேசியுள்ளனர்.

அப்புலவர்கள் வரிசையில் தமிழ்நலம் பேணிய பெருமை மிகு குமரகுருபரரும் இடம் பெற அவர் தம் எல்லாச் சிறப்புக்களையும் இந்நூலாசிரியர் திரு. அ. நடேச முதலியார் அவர்கள் தந்துள்ளார்கள்.

சேக்கிழார் பெருமானைப் ''பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாராட்டியுள்ளார். அக்கிழாரைப்போல திரு. நடேச முதலியார் அவர்கள், தாம் எடுத்துக் கொண்ட பொருளை ஊன் உருக, உடல் உருக, உள்ளம் உருக எடுத்தியம்பும் ஆற்றல் படைத்தவர் என்பதை இந்நூல் இனிது விளக்கிடும்.

பெரும் பேரறிஞர்களின் அறிவுச்சிந்தனைகள் பல நல்லுரு வடிவில் பல்கலைக் கழக வெளியீடுகளாக வந்துள்ளன. அவ்வடிவிற்கு மேலும் இந்நூல் அணியாகின்றது.

*வெளியீட்டுத்துறை*

உள்ளுறை


1) குமரகுருபரரைப் பற்றிய வரலாற்றுண்மை 1—13

2) குமரகுருபரரின் கற்பனைத் திறம் 16—44

3) குமரகுருபரர் தமிழ் நலம் 46—52

# குமரகுருபரரைப்பற்றிய வரலாற்றுண்மை

பரந்துபட்ட நிலவுலகத்துச் சிறந்து விளங்கும் செந் தமிழ் நாட்டின் பண்டைய பெருமக்களுடைய வாழ்வியலே அறிந்து மகிழ இலக்கியம் பெரிதும் உதவி செய்கிறது என்பது அனைவர்க்கும் ஒப்ப முடிந்த கருத்து. அவ்விலக்கியங்கள் மொழி வழியாக வருதலின், மொழியின் வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சிக்கும் அம்மொழி பேசும் மக்களின் வளர்ச்சிக்கும் இன்றியமையாது வேண்டப்படும். தமிழ் மொழி பல்லாயிரம் ஆண்டுகளாகவே மக்களால் பேசப்பட்டும் வருகிறது. இலக்கிய வடிவில் எழுதப்பட்டும் வளர்ந்து வருகிறது.

திருவள்ளுவனுர், உலகத் தோற்றத்தைக் குறிப்பால் உணர்த்த வரும்போது, வான் சிறப்பில்,

*''விசும்பிற் றுளிவீழின் அல்லால் மற்றாங்கே*
*பசும்புற் றலே காண் பரிது''*

என்று வானினின்று நீர்த்துளி நிலத்தில் வீழ்ந்தாலன்றிப் புல்லி னுடைய தலேயில் பசுமையாம் உயிர்த்தோற்றத்தைக் கூடக் காண முடியாது என்று கூறுகிருர். ஓரறிவுயிராகிய மரஞ்செடி கொடிகளின் உயிர்த்தன்மையை அவற்றிடம் காணப்படும் பசுமையால் அறிய முடியும் என்பது ஆசிரியர் கருத்து. அங்ஙனமே, மக்கள் தம் உள்ளத்து எழுந்த உணர்ச்சிகளே எண்ணமாக்கி, வெளியிட வரும்போது நாவை மெல்ல அசைத்து மொழியுருவங் கொடுத்து ஒலியாக வெளியிட்ட மொழி, முதல் மொழி தமிழ்தான் என்பதனே நாமறிய வேண்டும் என்று ஒரு புலவர்

*''பைய நாவை அசைத்த பசுந்தமிழ்''*

என்று கூறி மகிழ்கிருர். இத்தொடரிலே, முதல் முதலில், மக்கள் நாவை மொழி பேசுவதற்கென்று, மெதுவாக அசைத்த வனும் அதனுல் முதல் முதலிலே, மொழியாக வெளி

வந்ததும், தமிழனே, தமிழே என்ற உண்மையையும், அதனேடு, மொழிகட்கெல்லாம், முன்னையது தமிழ் என்ற தனையும் பசுந்தமிழ் என்றதனுலும் குறிப்பிடுகிருர்.

இவ்வாறு முதன் முதலாகத் தோன்றிய தமிழ் மொழி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நாட்டு மக்களுடைய வளர்ச்சிக் கேற்ப, வாழ்வுக்கேற்ப வளர்ந்து வந்து காலத்தொன்மையும் கருத்துத் தொன்மையும் உடைய மொழியாய் விளங்குவ தாயிற்று. வரலாற்றுக் காலங்களுக்கு முன்னமேயே வளர்ந்து வந்த தொன் மொழிகளுள் ஒருதனிச் செம்மொழியாய் விளங்குவது தமிழ். மக்கள் நாகரிகத் தொடர்ச்சி ஆராய்ச்சி யாளர்களும், மொழியாராய்ச்சி வல்லுநர்களும் தமிழ் மொழி தலைசிறந்தது, தொன்மையானது, மென்மையானது, இனியது என்ற பேருண்மையை ஒருமுகமாக வெளிப்படுத்தி யுள்ளனர். இத்தகைய பெருமை உடைய மொழியின் வழி வந்த மக்களாகிய நாம் பண்டைப் பெருமையினை அறிய முடியாமற் போனுலும், காலங்கடந்த கருவூலப் பழம்பாடல் களைப் பெற முடியாமற் போனுலும், இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன் தோன்றின திருக்குறளையும், மூவாயிரம் ஆண்டு களுக்கு முன் தோன்றின தொல்காப்பியத்தையும், அதற்கு முன்னும் பின்னும் தோன்றின என்று கூறப்படும் எட்டுத் தொகை பத்துப்பாட்டினையும் பெற்றிருக்கிருேம் என்று ஒருவாறு ஆறுதல் பெற முடியும். அங்ஙனம் பெற்ற நூல்களைக் கொண்டு பெறலரும் தமிழ்ப் பண்பினையும், தமிழர் வாழ் வினையும் ஒரளவாக அறிய முடிகிறது. அந்த அருமைப் பாட்டினை அறியும் பொழுது, அந்தப் பெருவாழ்வினை நினைக்கும் பொழுது, அம் மொழிக்குத் தொண்டு செய்த மூதறிஞர்களையும் அம்மொழியின் சிறப்பியல்புகளையும் அறிந்து உருகாமல் இருக்க முடியாது. அங்ஙனம் வழி வழி வந்த பேரறிஞர்களுள் குமரகுருபரர் ஒருவர்.

### செந்தமிழுள்ளம்:

குமரகுருபரர் செந்தமிழ்ப் பாண்டி நாட்டுப் பழம்பதியாம் திருவைகுண்டம் என்னும் திருநகரில் தோன்றித் தமிழ் நூல் களை முழுதும் கற்றறிந்து, தமிழ் உள்ளம் சிறந்த தமிழ்ப் பேரறிஞராய் விளங்கினவர் என்பதை யாவரும் அறிவர். அவருக்குத் தமிழினிடத்திருந்த அளவிலாக் காதலும், தமிழ் வளர்ச்சியில் ஊன்றி நின்ற உயர் பேருக்கமும், அதனுல் அவருக்கு முன்பிருந்த மூதறிஞர்களிடத்து அவர்காட்டும்

அன்புப் பெருக்கும், அவருள்ளும் சங்கப் புலவர்களிடத்திலும், அவர்கள் கொடுத்த தமிழினிடத்திலும் அவர் வைத்திருந்த பெரும் பற்றும், அதன் வழியாக அவர் பெற்ற தமிழ் நலச் சிறப்பும் அவர் வாக்கினாலேயே அறியக்கிடக்கிறது.

1. *''முதுசொல் புலவர் வடித்த செழுந்தமிழ் நூல் பாழ் போகாமே.''*
2. *''காலத்தொடு கற்பனை கடந்த கருவூலத்துப் பழம் பாடல்.''*
3. *''தொடுக்கும் கடவுட் பழம் பாடற்றொடையின் பயன்.''*
4. *''முதுதமிழ் உததியில் முளைத்த அமுது.''*

என்று இவ்வாறாகக் காட்டப்பெறும் மேற்கோள்களினால் அவருக்குச் சங்க இலக்கியங்களில் இருந்த பற்றும், அப் புலவர்கள் பால் இருந்த பேரன்பும், அம்மொழியினிடத்திருந்த உணர்ச்சிகளும் தெற்றென விளங்குகின்றன. இலக்கிய இலக்கணத் திட்டமும், அவற்றை நுண்ணிதின் ஆராய்ந்து கூறும் அருமைப்பாடும், அதற்கு ஏற்ற சீரிய கூரிய தீஞ் சொற்களால் தொடுத்துக்காட்டும் மொழியழகும், படிக்குந் தொறும், படிக்குந்தொறும் இன்பம் பயப்பனவாய் உள்ளன. இத்துணைப் பேரறிவும் பெரும் சிறப்பும் வாய்ந்த புலவர் பெருமான் மொழிக்குத் தொண்டு செய்ய வரும்போது அவர் காலத்துச் சமுதாய இயல்பிற்கேற்ப, அவர்காலத்து மொழி வளர்ச்சியின் நிலைக்கேற்ப அன்றைய சமுதாய விருப்பத்திற் கேற்ப வழிப்படுத்த வந்த பொழுது சிறு சிறு நூல்களாக உயர்ந்த எண்ணங்களைச் சிறந்த மொழியில் தெளிவும், இனி மையும் பயக்க ஈர்ப்புடைய இசைச் சொற்றொடர்களால் கற் பவர்களின் உள்ளங்களில் தமிழின் அழகொழுகக் கோத்துக் கொடுக்கும் தனிப்பெரும் தன்மை உடையவராய் விளங்குகிறார். அவருடைய அருந்தமிழ் நடை அவருக்கு முன்பிருந்த பெரு மக்களின் அனைத்து நடையினும் மேம்பட்டு, பின் வந்தவர் யாராலும் கடைப்பிடிக்க முடியாத அருமைப் பாடுடையதாய்ச் செம்பாகமும், செழுந்தீங்கனிச் சுவையும் தமிழ் மொழியின் முழு இனிமையும் உடையதாய் விளங்குகிறது. இத்துணைப் பேராசிரியர் இளமையில் ஊமையராய் இருந்தார் என்றும், பின் பெற்றோர்கள் செந்தில் வேள் முன் பாடுகிடப்ப, அவன ருளால் பேசினார் என்றும், ஐந்தாண்டு இளம்பருவத்தே கந்தர்

கலி வெண்பா என்னும் அருள்நூலை முருகன் திருவருளால் பாடினுர் என்றும் வழி வழி வருகின்ற ஒரு கதை நம்மனேர்க்கு வியப்பை ஊட்டுகிறது. நம் தமிழ் நாட்டில் பிற்காலத்தில் ஒரு மகன் பிறர் செயற்கருஞ் செயலைச் செய்து முடிப்பானுனல் அவன் முயற்சியினுலும், அவன் அறிவாற்றலாலும் செய்யக் கூடியவன் என்பதை மறந்து, மறுத்து அத்தனையும் அவனுக்கு அப்பாற்பட்ட அருட்செயல் என்று கொண்டு முடிப்பது ஓர் இயல்பான வழக்காய்ப் போய்விட்டது. அங்ஙனம் குமரகுருபர ரின் அருஞ்செயலைக் கண்டு, அரிய மொழியாற்றலை உணர்ந்து அதனை முருகப் பெருமானின் திருவருட் செயல் என முடித்த னர். மக்கள் உள்ளத்திலே மனித முயற்சியினுடைய சிறப்பை யும் அறிவாற்றலையும் முயன்று பெற முடியாத போது, பெற் ருன் ஒருவனைக் கண்டவுடனே வியந்து போற்றுதலோடு அமையாது, அச்செயல் தெய்வச்செயல் என முடித்துவிடுவது வழி வழி வந்த ஒரு வழக்காகிவிட்டது. இன்றைய உலகில் விண்வெளிச் சென்று திங்கள் மண்டிலத்தில் தங்குவதற்குரிய தனித் தனி விஞ்ஞான மகனிடத்துத் தோன்றுவதையும், அணுவில் இருக்கும் ஆற்றலை அறிந்து, அதனைப் பிளந்து ஆக்கவும், அழிக்கவும் கூடிய அறிவுப் பேராற்றலையும் கண் கூடாகப் பார்க்கின்ற மனிதன் மொழித் திறத்தில் முட்டறுத்து பிறர் அடைய முடியாத பெருஞ் சிறப்போடு தனக்கே உரித் தான தனித் தன்மை ஒருவன் மொழியிடத்துப் பெற்று விளங்க வும் கூடும் என்பதனை நாம் அறியலாம்.

இங்ஙனமாக இடைக்காலத்தில் நாடும், மொழியும், நாகரி கமும் உரிமைஅற்று அடிமை மனப்பான்மைவளர்ந்த காரணத் தால் யாரேனும் ஒருவரிடத்தில் காணமுடியாத வியப்பிற் குரிய சமுதாயத்திற்கு நன்மை தரக்கூடிய ஒரு அருஞ் செய லைக் காணும் பொழுது அந்தத் திறன் தெய்வத் திருவருளால் நிகழ்ந்தது என்று முடித்துவிடுவது ஒரு வழக்காய்ப் போய் விட்டது, அந்தநிலை மனிதர்களிடத்திருக்கின்ற திறமையை யும், ஆற்றலையும், அறிவையும் அறிந்து கொள்ள முடியாத, அறிந்து கொள்வதற்கு வாய்ப்பில்லாத சூழ்நிலையே யாகும்.

குமரகுருபரர் என்னும் புலவர் பெருமான் பிறந்து ஐந்து ஆண்டு வரையிலும் ஊமையாய் இருந்தார் என்பதும் அவரு டைய பெற்றேர்கள் அவர் பேசாத நிலைமைக்கு வருந்திச் சீர் அலைவாய்ப் பெருமான் திருமுன் பாடுகிடப்ப அவனருளால் வாய் திறந்து கந்தர் கலிவெண்பா என்னும் அரும் பெரும் தெய்வத் தமிழ்த் திருநூலை ஆக்கினுரென்றும்.

செவிவழியாகக்கேட்டுவருகிறேம். இச்செய்திக்கு அவருடைய, வாழ்க்கை வரலாற்றேடு ஒட்டின வரலாற்றுப்பகுதியாகவோ, அவர் படைத்த இலக்கியங்களில் அகச்சான்ருகவோ, அவர் காலத்து நிகழ்ந்த பிற நிகழ்ச்சிகளின் வாயிலாகவோ, அவரிடம் ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் தொடர்பாகவோ, அவர் காலத்திருந்த பிற இலக்கியங்கள் வாயிலாகவோ. அகச் சான்று புறச்சான்றுகளினுல் ஏதும் துணை இதுவரையிலும் கிடைக்கப்பெறவில்லை. அதனுலேயே அந்தச் செவிவழிச் செய்தி அவர்பால் வைத்த பற்றின் மிகுதியினுலும், அவர் செய்த இலக்கியங்களின் அருமைப்பாட்டினுலும் அம் மொழித் திறத்துக் காணப்படும் அழகொழுகும் வியப்பினுலும் தெய்வத் திருவருளால் கிடைக்கப்பெற்றது என்று ஏற்றி உரைக்கப் பட்டது என்று நினைப்பதிலும் தவறில்லை என்றே தோன்று கிறது. மற்று அவருடைய நூலைக் கொண்டு முழுதும் சிந்தனை முகத்தாற் சொல்லும் பொழுது அந்தப்புலவர் பெருமான் கற்றுத்துறை போகிய நற்றவச்சிலர் என்றே தெளிவு பெறு கிறது.

சமயநூற்புலமை :

அவர் இளமை நலம் கனிந்து முதல்முதலாக இயற்றிய கந்தர்கலிவெண்பா என்ற திருநூலில் முழுமுதற் பொருளாகிய முருகப்பெருமானிடத்தில் வேண்டுகோளாக விடுக்கின்ற செய்தியை முடித்துக் கொடுக்கிருர். ஆங்கு,

பல்விதமாம்.

*ஆசுமுதனுற் கவியு மட்டாவ தானமுஞ்சீர்ப்*
*பேசுமயல் பல் காப்பியத்தொகையும்—ஓசை*
*எழுத்துமுத லாமைந் திலக்கண முந் தோய்ந்து*
*பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து........முன்னின்றருள்*

என்று முடித்துக் கொடுப்பதனுல் ஆசிரியர் பெருமான் இறை வனிடத்தில் தமிழ்த்துறைப் புலமை நிறைவு வேண்டும் என்ப தனை வேண்டுகோளால் விளக்கியிருக்கிருர். மேலும் இந்தக் கலிவெண்பாட்டானது சைவசித்தாந்தச் செந்நெறியில் ஒழுகு வார்க்குச் சமய உண்மைகளைப் படிநிலைகளில் நின்று அறிந்து கொள்ள வேண்டிய முறையினைத் தெளிவு செய்யும் முகத்தான் படிப்படியாக வளர்த்துச் செல்கிறது. இறைவன் முத்திறப் பட்ட உயிர்களுக்கு எப்படி எப்படி அருள் பாலிக்கிருன் என்ற முறையினையும் உயிர்கள் இறைவனை அடைதற்குரிய வழியினை

யும் சமயநூல்களாகிய சைவ சித்தாந்தச் சாத்திரங்களில் சொன்ன படிநிலைகளை அழகுபட ஒழுங்கு படுத்தி விளக்கி இருக்கிற முறை சித்தாந்தச் சாத்திரங்களில் ஆசிரியருக்கு உள்ள தெளிவும் பற்றும் தெற்றென விளங்குகிறது.

பதமுத்தி, பரமுத்திகளை விளக்கும் நிலையும், உயிர்களின் தகுதிநிலைக்கேற்ப இறைவன் அருள் செய்யும் நிலையும் பல சாத்திரங்களைப்படித்துத் தெளிவு பெருதவர்களும் கூட எளிமையில் தெளிந்து கொள்ளும்படிச் செப்பனிட்டுத் தெளிவு செய்திருக்கிறூர்.

''உலவா

*தறிவுக்கறிவாகி யவ்வறிவுக் கெட்டா*
*நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்*
*கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்*
*குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு—திருநோக்கால்*
*ஊழ்வினையைப் போக்கி யுடலறுபத் தெட்டுநிலம்*
*ஏழுமத்து வாக்க ளிருமூன்றும்—பாழாக*
*ஆணவ மான படலங் கிழித்தறிவிற்*
*காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்*
*அடிஞானத் தாற்பொருளு மான்மாவுங்காட்டிக்*
*கடியார் புவனமுற்றுங்காட்டி—முடியாது*
*தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கும்*
*நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்*
*வரவு நினைப்பு மறப்பும் பகலும்*
*இரவுங் கடந்துலவா வின்பம்—மருவித்து''*

என்றும்,

*''கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய் துண்ணின்*
*றொருமலத்தார்க் கின்ப முதவிப்—பெருகியெழு*
*மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருட னேயிருத்தி*
*ஆன்றபர முத்தி யடைவித்துத்—தோன்றவரும்*
*யானென தென் றற்ற விடமே திருவடியா*
*மோனபரா னந்த முடியாக—ஞானம்*
*திருவுருவா விச்சை செயலறிவு கண்ணு*
*அருளதுவே செங்கையலரா—இருநிலமே*
*சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே யெவ்வுயிர்க்கும்*
*பின்னமற நின்ற பெருமானே''*

என்றும் வரும் பகுதிகளால் அடிகளாருடைய சமயநூற்புலமை தெளிவாக விளங்குகிறது.

இனி இறைவன் உயிர்களுக்கு இரங்கும் நிலையில் துன்பம் துடைத்தல் இன்பம் அளித்தல் என்ற பகுதியில் சைவ சித்தாந்தப் பேருண்மையினை விளக்கும் கந்தபுராண வரலாற்றை மிக மிகச் சுருக்கி, இறைவனுடைய நெற்றிக் கண்ணில் பொறியாய்த் தோன்றினது முதல் ஆறுபடை வீட்டில் அடியார்க்கு அருளுருவாய்த் தோன்றி அவரவர் வேண்டும் வரங்கொடுக்கும் வியத்தகு நிலை வரையிலும் அடிகள் விளக்கியிருப்பது அடிகளார் புராண நூலறிவின் நுண்ணிய திறத்தினைத் தெற்றென விளக்குகிறது.

மரபு வழிப் புலமை:

அடுத்து அடிகளார் தமிழின்பால் வைத்த பெரும் பற்றினை அவர்கள் ஆங்காங்கு கூறும் அழகிய உள்ளங்கனிந்த உருகு தமிழைக் கொண்டு நம்மால் அறியமுடிகிறது.

*''கலைப்பா னிறைந்த முதுக் குறைவிற்*
*கல்விச் செல்வர் கேள்வி நலம்*
*கனியக் கனிய வமுதூறும்*
*கடவுண் மறையு முதற் சங்கத்*
*தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியும்*
*தண்டே னறையும் வடித்தெடுத்த*
*சாரங் கனிந்தூற் றிருந்த பசுந்*
*தமிழு நாற.............. முத்தம் தருக.''*

என்றும்

*''சிறிய வெனதுபுன் மொழியும் வடிதமிழ்*
*தெரியு மவர்முது சொல்லெனச் சூட்டினர்.''*

என்றும், கூறும் இந்த அருமைப்பாட்டினுல் சங்கத் தமிழினும் பண்டைச் சான்றோர்களிடத்தினும் அடிகளார்க்கு இருந்த பயிற்சியும் பற்றும் தெளிவு பெறுகின்றன. மற்று அடிகளார் மதுரையில் வாழ்ந்த ஞான்று செய்தருளிய நீதிநெறி விளக்கம் என்னும் அழகிய செந்தமிழ் நூல் அடிகளாருக்குத் திருக் குறளில் இருந்த ஊற்றமும், பிற நீதி நூல்களில் இருந்த பற்றும், விளங்கவும் தெளிவுபடவும் இவ்வுலகம் உள்ள வரையிலும் அழியாத ஒளி அறிவு விளக்காய் விளங்குவதை யாவரும் அறிவர்.

பின்னர், மதுரைக்கலம்பகம் முதலாகிய நூல்களில் புறத்திணை மரபுகளையும், அகத்துறைப் பாடல்களையும் அடிகள்

அமைத்துக் கொடுத்திருக்கின்ற முறை அடிகளாருடைய பொருளிலக்கண ஆழ அறிவிற்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. செய்யுளியல், யாப்பருங்கலம். யாப்பருங்கலக் காரிகை முதலிய செய்யுளிலக்கண அமைதிகள் அத்தனையும் ஒன்று சேர்த்து, சிதம்பரச் செய்யுட் கோவை என்ற பெயரில் தமிழில் உள்ள பாட்டின் வகைகள் அத்தனைக்கும் இலக்கண, இலக்கியமாய் விளங்கும்படிப் படைத்திருப்பது அவருடைய தமிழிலக்கண வரம்பிற்கு ஓர் எடுத்துக்காட்டு. மேலும் சமய நூல்களில் சாத்திர நுட்பங்களைக் கூறுகின்ற அளவை நூலாகிய இலக்கண நூல் போலப் 'பண்டார மும்மணிக் கோவை' என்ற அழகிய நூல் மாணவன் குருவை இறைவனுகவே வழிபடுகிருன் என்ற முறையில் வைத்துப் போற்றிப் பணிந்திருக்கும் சிறப்பானது அடிகளாருடைய ஆழ்ந்தகன்ற நுண்ணிய சமய சாத்திர நூலறிவினை வெளிப்படுத்துகிறது.

திருவாரூர் நான்மணிமாலை, சிதம்பரம் மும்மணிக்கோவை மூத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களில் இறைவனுடைய திருக்கோலங்களைத் தர்க்க நூலுணர்வோடு காட்டுகின்ற கருத்துக்கள் அளவை நூலில் இருந்த பேரறிவினைப் புலப்படுத்துகின்றன. தமிழின் ஏற்றத்தைக் குறிக்க வரும்போது பிற மொழிக்கில்லாத பெருஞ்சிறப்பினை உணர்த்த அம்மையப்பருடைய திருமேனியை முன்னிறுத்தி இவ்வடிவினை ஒருவனென்கோ, ஒருத்தியென்கோ என வினவி பிறமொழியில் சொல்ல முடியாமையைக்காட்டி

*''ஒருவர் என்ருேர் இயற்சொல் இலதாயின்*
*யான் என் செய்வேனே.''*

என, ஒருவர் என்ற பெயரில் ஆண், பெண் இரு பாலும் அடங்கும் ஒருமை எனக்காட்டி, அடங்குமாயினும் ஒருமையென முடித்துத் தமிழின் அருமைப்பாட்டை இலக்கண அமைதியோடு பொருத்திக் காட்டுகிருர்.

மேலும் தமிழில் விளி வரும்பொழுது அம்மையப்பரை விளிக்க எந்த ஒரு சொல்லால் அழைப்பது என்றபொழுது, பிறமொழிக்கில்லாத தனிச்சிறப்பினை விளக்க வந்து,

*''பையரவு அல்குல் எந்தாய் என்று பாடுவனே''*

எனக்காட்டி, எந்தாய் என்ற சொல் எந்தை என்ற ஆண்பாற் பெயரின் விளியாகவும் எம் தாய் என்ற பெண்பாற் பெயரின் அண்மை விளியாகவும் அமைத்து, எந்தாய் என்பது ஆண்

பால், பெண்பாலாகிய இருபாலேயும் உணர்த்தும் ஒருமை விளிச் சொல்லெனத் தமிழின் ஏற்றத்தை இலக்கண வகையால் காட்டியிருக்கிருர். இனி தமிழ்நாட்டுத் தவப்புதல்வர்களாய்த் தோன்றின அருளாளர்களுடைய பெருவாழ்வில் ஞானசம்பந்தப் பிள்ளேயார், நாவுக்கரசர் பெருமான், நம்பியாரூரர், போன்றவர்களுடைய வரலாற்றில் அவர்கள் தடுத்தாட்கொள்ளப்பட்டமையும், இறைவன் அருள் பெற்றமையும், அவர்களுடைய திருவாக்குகளிஞலேயே அறியக்கிடக்கின்றன. ஞானப் பிள்ளேயார்,

*"போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத்*
*தாதையார் தான்எனே ஆண்டது"*

என்றும்,

*பானல்வாய் ஒருபாலனீங்கிவன் என்று நீ பரிவெய்திடேல்"*

என்றும், தன் குழந்தைத் தன்மையையும், இறைவன் பால் கொடுத்து ஆண்டமையினேயும், தன் திருவாக்கிஞலேயே விளக்குகிருர். நாவுக்கரசர் பெருமான்,

*"உறிமுடித்த குண்டிகையோர் கையில்தூக்கி*
*ஊத்தைவாய்ச் சமணர்க்கோர் குண்டாக்கஞய்*
*கறிவிரவு நெய்சோறு கையில் உண்டு*
*கண்டார்க்குப் பொல்லாத காட்சியானேன்"*

என்றும்

*"கல்லிஞேடு எனேப்பூட்டி அமண்கையர்*
*ஒல்லே நீர் புக நூக்கு என் வாக்கிஞல்*
*நெல்லு நீள்வயல் நீலக் குடியரண்*
*நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே"*

என்றும், தம் திருவாக்கிஞலேயே தம் வரலாற்றைக்கூறுவதும்

*"வெண்ணெய் நல்லூரில் அற்புதப் படி ஆவணம் காட்டி*
*அடியனேனேயும் ஆளதாக் கொண்ட நற்பதத்தை"*

என்றும்,

" ஒட்டியாட்கொண்டுபோய் ஒளித்திட்ட உச்சிப்போதனே " என்றும், நம்பியாரூரர் தம் வரலாற்றினேத் தாமே கூறிப் போந்ததும் போல, குமரகுருபர அடிகள் தாம் செய்த பதின்மூன்று நூல்களுள்ளும் யாண்டும் தாம் ஊமையாய் இருந்து அருள் பெற்ற குறிப்பினேக் கூறியுள்ளதாகக் காணப் படாமையின் அவர் ஊமையாய் இருந்தார் என்பது செவிவழிச் செய்தியே யன்றி உண்மைச் செய்தியாகும் என்று துணிதற்கு இடமின்று.

இங்ஙனமாக ஒருவர் வரலாற்றை அறிவதற்கு உடனிருந்த புலவர்கள் அவருடைய வரலாற்றை எடுத்துக் கூற அறிவதும் உண்டு. அங்ஙனமாக அவர்காலத்துப் புலவர்கள், சான்றோர்கள் யாரும் அவரைப் பற்றி ஊமையாய் இருந்து அருள் பெற்று உயர்ந்தார் என்று கூறினதாகவும் காணப்படவில்லை. மேலும் அடிகளாருடைய வரலாற்றில் தருமை ஆதீன குருமணிகளாய் விளங்கின மாசிலாமணி தேசிகரிடத்தில் அருட்பேறு பெற்றமையைப் பண்டார மும்மணிக் கோவையில் மிகத் தெளிவாகக் கூறியுள்ளதையும் ஏன்? பண்டார மும்மணிக் கோவையையே தம்மையாட்கொண்ட குருமணிக்கு வழிபாட்டு நூலாகச் செய்துள்ளமையையும் நாம் அறிவோம். அருளாளர்கள் இறைவன் திருவருளைப் பெற்ற பின் மற்றோர் இடத்தில் திருவருளைப் பெற்றதாக வழக்காற்றிலும், வரலாற்றிலும் காணப்படாமையால் குமர குருபரர் இளம்பருவத்தில் முருகனுடைய திருவருளைப்பெற்றுப் பாடினர் என்பதும், பிற அருளாளர் வரலாற்றோடு முரண்படுகிறது என்பதைக் காண்கிறோம்.

மணிவாசகப் பெருமானுடைய வரலாற்றில் இறைவன் திருப்பெருந்துறையில் குருவடிவாய் வந்து அருளினமையும், அத்திருக்கோலத்தைத் திருக்கழுக்குன்றத்தில் காட்டினமையும், தில்லைக்கு வா என்று குருமுதல்வர் ஆணைதந்தமையும், வாதவூரடிகள் வாக்கினாலேயே அறியக்கிடப்பது போல அடிகளாருடைய வாக்கில் அங்ஙனம் பெறப்படாமையால் அடிகள் அறுமுகப் பரம்பொருளினிடத்தில் திருவருட்பெற்றுத்தான் பாடினர் என்பதனை அறுதியிட்டு உறுதி செய்வதற்கு இடமில்லை.

இறுதியாகத் தமிழ்நலம் சான்ற பெரியாராகிய அடிகள் கலைமகளிடத்தில் தமிழ் நலம் சான்ற புலமை வேண்டும் என்பதனை வேண்டுகோளாக விடுக்கும் பொழுது,

''சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்''

என்றும்,

''பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனு மென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்காய்''

என்றும்,

... தொ... பொருள் ஆய்வு ...
... ஆலயம் - சென்னை ...

*''காக்கும் பனுவற் றுறை தோய்ந்த*
*கல்வியுஞ் சொற்சுவைதோய்*
*வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்''*

என்றும் வேண்டுவதால் அடிகளாருக்குக் கல்வியினிடத்திலும், அக்கல்விப் பயனால் செஞ்சொற் கவி பாடுதலிலும், கவியின் பத்தை நுகர்வதிலும் உள்ள அளவிலாக் காதலை அறிகிறோம்.

இங்ஙனமாய சான்றோரைத் திருவருள் வலத்தான் பாடினா ரெனக் கூறி அவரது பெருமையைக் குறைக்கவேண்டியதில்லை. உலகத்தில் இளமைப் பருவத்தில் சில ஆண்டுகள் நன்றாகப் பேசாமல் இருந்து பின்னால் நாத்திருந்தி, நன்றாகப் பேசி, அறிவும் ஆற்றலும் உடையவராய் விளங்குகின்ற உடற்கூறு உடையார் பலர் உண்மையின் அடிகளாரும் அங்ஙனம் சில ஆண்டுகள் செம்மையாகப் பேசாதிருந்து, பின்னர் பன்னாற் பயிற்சியான் நுண்ணறிவின் ஏற்றத்தினால் பல பிறவிகளில் செய்த நற்றவப் பயனால் கல்வி கேள்வி நலம் சான்ற நற்றமிழ்ப் புலவராய்த் தருமை ஆதீனத்தவமுதல்வராம் மாசிலாமணி தேசிகரிடம் திருவருள் பெற்ற தவமுனியாய் விளங்கித் தன்னிகரில்லாத் தனிப் பெருந் தமிழ்க் கவிஞராய் இன்பத் தமிழின் சுவையமுதூட்டும் செந்தமிழ்த் தாயின் சீரிய புதல் வராய் விளங்கினார் என்பதே சாலப் பொருந்தும்.

ஆக செந்தமிழ்ப் பாண்டி நாட்டில் பொன்னியினும் சிறந்த பொருநை நதிக்கரையில் சீரும் சிறப்பும் மிக்க செந்தமிழ்க் குடியில் திருவைகுண்டம் என்னும் திருப்பதியில் தோன்றிச் சைவமும் தமிழும் தழைக்க நுண்மாண் நுழைபுலம் பெற்றுத் தமிழ்ப் புலமையோடு வைதிக சைவ சித்தாந்த சமயப் பேரறிவும் உடையராய்த் தம்முடைய காலத்து ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனிப் பெரும் கவிஞராய் விளங்கியவர் குமரகுருபரர் என்பதனை நாம் ஒருவாறு அவருடைய படைப் பாகிய பதின்மூன்று நூல்களிலிருந்து அவருடைய வரலாறாகக் காண்கிறோம். அத்தகு பேராற்றல் பெற்று விளங்கிய புலவர் பெருமானாகிய குமரகுருபரருடைய நூல் முழுதும் நுணுகி அறிந்து சுவைத்து மகிழ்வதற்கு ஒரு துணையாகக் குமரகுருபர ருடைய இலக்கியங்களில் உயிரோட்டமாகக் காணக் கூடிய சுவைத் திறன்களை மூன்றாகப் பிரித்து இன்பம் நுகரலாம்.

முதலாவதாக அடிகளாருடைய அருந்தமிழ்ப்பற்றினை ஆங்காங்குக் காணும் பலவகைக் கோணங்களில் தமிழ் நலம்

என்ற தலைப்பில், சிலவற்றைக் கண்டு சுவைக்கலாம். அதனை அடுத்து, கவிஞனுக்கு வேண்டிய கற்பனைத்திறனை, அடிகளாருடைய உள்ளக் கருத்தின் பெருமையளவிற்கு விரிந்துசெல்லும் பாகுபாட்டை அதற்கேற்ற செந்தமிழ் நடையால் சிறப்பித்துக் காட்டும் இன்தமிழ்ச் சுவையைக் கண்டு மகிழ்வோம்.

மூன்றாவதாக ஒரு புலவன் மொழி நலனும், கற்பனைத் திறனும் உடையனாயினும் அவனுடைய பாட்டில் தெய்வ மணம் இல்லை என்றால், ஆடையணியின்றி அழகு செய்யப்பட்ட உயிரற்ற வெற்றுடல் போல் ஆகிவிடும். ஆகையால் அடிகளாருடைய தீந்தமிழ்க் கவிகள் தெய்வ மணங் கமழும் திருப்பாட்டுக்கள் என்பதனையும், அவருடைய தெய்வ வழிபாட்டின் போக்கு செந்தமிழ் நாட்டுப் பண்டைச் சமயமாகிய சைவசமயத்தின் உண்மைவிளக்கமாக விளங்கும் சைவ சித்தாந்தப் பேருண்மையைப் பல சமயங்களோடு ஒப்பிட்டு மிகுதிறனை முடித்துக் கொடுத்திருக்கின்ற பகுதியைச் சமயக் கோட்பாடு என்ற தலைப்பிலும் எடுத்துக்காட்டி நூல் நோக்காக இந்தப் பேச்சுக்கள் அமைகின்றன.

# குமரகுருபரரின்
# கற்பனைத்திறம்

கற்பனையென்பது இல்லாததைச் சொல்லுவதும், உள்ளதை உயர்த்திச் சொல்லுவதும், ஒன்றை மற்றொன்றில் ஏற்றிச்சொல்லுவதும் எனப் பலவகைப்படும். இடைக்காலத்தில் பெரும்பாலும் கற்பனைகள் அளவிற்கு அதிகமாகவும், அதுவே புலவன் திறத்திற்கு ஒரு அளவு கோலாகவும் அமைந்துவிட்டது. அந்த முறையில் கம்பனுடைய காவியமும், கந்தபுராணமும், பிற இலக்கியங்களுங்கூட அமையும். இப் புலவர்பெருமக்கள் எடுத்துக் கொண்ட பொருளிற்கேற்ப, பாத்திரத்திற்கேற்பச் சொல்ல வந்தாலும் அளவிற்குமீறியும், அலுத்துப் போகும்படியும் கூடப்பாடிவிடுவார்கள். இவர்கள் முன்னோர் நூலினை முறையாகப் பயின்றவர்களாயினும் காலத்திற்கேற்பச் சமுதாயம் வியக்கும்படித்தங்களுடைய அறிவுத்திறனை வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பெனக் கருதி வெளியிட்டிருக்கிறார்கள். அங்ஙனமே குமரகுருபர அடிகள் நாட்டையும், நகரத்தையும், சமுதாய வாழ்வையும் சிறப்பித்துச் சொல்ல வேண்டும் என்ற பெருநோக்கோடு, உள்ளதை மிகுத்துச் சொல்லுகின்ற முறையால் கற்பனை வளம் தோன்றுகின்ற இடங்கள் மிகப்பல. பாண்டி நாட்டையும், மதுரைப் பழம்பதியையும் சிறப்பிக்க வேண்டும் என்று கருதும் பொழுது அடிகளாருடைய உள்ளத்தில் வைகையும், பொருநையும், பொதியமும், அருவியும், புகுந்து அளவுகடந்த கற்பனைகளை ஊற்றெடுக்கச் செய்கின்றன. அவர்கள் பாடின மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மை குறம் இவற்றில் நாட்டின் சிறப்பையும் கற்பனை உள்ளத்தோடு கவினுறத் தீட்டியுள்ளார்.

*'' திங்கண்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை*
*தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை*
*அங்கயற்க ணம்மைதிரு வருள்சுரந்து பொழிவதெனப்*
*பொங்கருவி தூங்குமலை பொதியமலை யென்மலையே ''*

[மீ. கு. 13]

என்று இயற்கையழகினை அப்படியே படம் பிடித்துக் காட்டக்கூடிய பேராற்றல் மிகுந்த ஆசிரியராக விளங்குகிறார். அவரே உள்ளத்தெழுந்த உணர்ச்சிமுந்துறுத்த பழமை உணர்வோடு

" சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடு மொருபாற்
சினப்புலியு மடப்பிணையுந் திளைத்திடுமங் கொருபால்
வெங்கரடி மரையினெடும் விளையாடு மொருபால்
விடவரவு மடமயிலும் விருந்தயரு மொருபால் "

[மீ. கு. 16]

என்று கற்பனையைச் சிறிது வளர்த்தி, முரண்பாடற்ற வாழ்வினைக் கூற மனைவாழ் விலங்கின்மேல் ஏற்றி அழகு செய்கிறார்.

"கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி யெடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்து முல்லைக்
கொடியில் வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறுந்
தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையு மரவுரியு
மிசைந்திடவே யுடுப்போம்
செழுந்தினையு நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்
சின வேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த
வியல்பிதுகா ணம்மே."

[மீ, கு. 18]

என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே குறிஞ்சி நிலக் குறவர்களினுடைய வாழ்வியலின் வளத்தினை இன்றைய நிலையிற் காட்டிச் சுவைக்க வைக்குந்திறன் இயல்பு நவிற்சியோடு பழமை உணர்ச்சியும் கலந்து நிற்கின்ற சுவைத்திறம் நிறைந்த கற்பனையாகக் காண்கிறோம். மேலே,

''குழியும் பசுங்கண் முசுக்கலே வெரீ இச்சிறு
குறும்பலவி னெடியபாரக்
கொம்பொடி படத்தூங்கு முட்புறக் கனியின்
குடங்கொண்டு நீந்த மடைவாய்
வழியுங் கொழுந்தே னுவட்டெழு தடங்காவின்
வள்ளுகிர்க் கருவிரற்கூன்
மந்திக ளிரிந்தேகும் விசையினில் விசைத்தெழு
மரக்கோடு பாயவயிறு
கிழியுங் கலைத்திங்க ளமுதருவி தூங்குவ
கிளைத்தவண் டுழுபைந்துழாய்க்
கேசவன் கால்வீச வண்டகோ ளகைமுகடு
கிண்டுவெள் ளருவிபொங்கிப்
பொழியுந் திறத்தினை நிகர்க்குமது ரைத்தலைவி''
[மீ. பி. த - 100]

எனவரும் பாட்டில் மலைநிலத்துத் தோன்றும் கருப் பொருள்களை வைத்து அவற்றைக் கொண்டு தம் உள்ளத்தின் அளவுக்கு வளர்த்துக் காட்டுகின்ற உயர்வுநவிற்சியின் பாற் படுத்தி அதனைத் தெய்வச் செயலோடு முடித்துக் கொடுக்கின்ற வியத்தகு கற்பனையைக் காண்கிறோம். மலையுச்சியில் தேன் வெள்ளத்திலே ஒரு ஆண் குரங்கானது பலா மரத்தின் கொம்பு ஒடிபடத் தொங்கிக் கொண்டிருக்கின்ற பலாப் பழத்தினைக் குடமாகக் கொண்டு நீந்துகிறது. அந்தத் தேன் வெள்ளம் வழிந்தோடிச் சோலையிற் பாய்கிறது. அங்கேயுள்ள கூரிய நகங் களோடு கூடிய கருவிரல் உடற்கூன் மந்திகள் கிளைவிட்டுக் கிளை தாவும் விசையினல் மரத்தில் உள்ள கொம்புகள் திங்கள் மண்டிலத்தின் வயிறைக் கிழிக்கிறது. வயிறு கிழிந்த திங்கள் மண்டிலத்திலிருந்து அமுதமான அருவி சொரிகிறது. இது திருமால் குறளாய் மூன்றடி மண் கேட்டு ஓரடியால் உலகளந்து மற்றோரடியால் வானைத்தாவினபொழுது அண்ட கோளகை முகடு கிழிந்து வான கங்கையின் வெள்ளருவி பொங்கிப் பொழியும் திறத்தினை ஒத்திருக்கிறது, என்று மிகமிக உயர்த்திக் கற்பனைத் திறத்தின் எல்லைக்குச் செல்வதைக் கண்டு மகிழ் கிறோம்.

இனி, கற்பனையை அழகுபடுத்துவதில் அறிவுநலம் விளங்கவும், இன்பச் சுவை பெருகவும் அமைத்துக் கொடுக்கும் ஒரு திறப்பாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டு. கயற்கண்ணியாகிய

அம்மையைக் குழந்தையாக அமைத்துக் கொண்டு முத்தம் கொடுக்க வேண்டும் என அம்மையை அழைக்கிருர்.

அங்கே முத்துக்களுடைய பல பிறப்பிடங்களைக் காட்டி அந்தப் பிறப்பிடங்களாகிய பொருள்களெல்லாம் அம்மையி னுடைய உறுப்புகளுக்குத் தோற்றன எனச் சொல்லித் தோல்வி பெற்ற பொருள்களிடத்திருந்து கிடைக்கும் முத்தம் எனக்கு வேண்டாம் அப்பொருள்களை வெற்றி கண்ட நின் திருவாய் முத்தம் கொடு எனக் கேட்கும் அழகும், கற்பனையும் அறிவிற்கு விருந்தாய் அமைந்துள்ளமையைக் காணலாம்.

*''கொழுதி மதர்வண் டுழக்குகுழற்*
*கோதைக் குடைந்த கொண்டலுநின்*
*குதலைக் கிளிமென் மொழிக்குடைந்த*
*குறுங்கட் கரும்புங் கூன் பிறைக்கோ*
*டுழுத பொலன்சி றடிக்குடைந்த*
*செந்தா மரையும் பசுங்கழுத்துக்*
*குடைந்த கமஞ்சூற் சங்குமொழு*
*கொளிய கழுகு மழகுதொய்யில்*
*எழுது தடந்தோட் குடைந்ததடம்*
*பணையும் பணைமென் முலைக்குடைந்த*
*இணைமா மருப்புந் தருமுத்துன்*
*திருமுத் தொவ்வா விகபரங்கள்*
*முழுதுந் தருவாய் நின் கனிவாய்*
*முத்தந் தருக ''*

[ மீ. பி. த. 46. ]

*அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமுதார்ந்து*
*அருட்கடலில் குளிக்கும் அறிவு நலம் சான்ற பெரியோர்*

ஆகையால் தமிழ்ச் சுவையோடு அருள் வேட்கையும் காட்டித் தன்னுடைய அரும் பெறற் கற்பனையை விளக்கு கிருர். முத்தங்களுக்கு வேற்றுமை காட்ட வரும் பொழுது தோற்றப் பொலிவால் அழகு செய்யும் முத்தங்களைத் தோல்வி செய்த தோற்றப் பொலிவுடைய அம்மையின் உறுப்புக்களின் அழகினை மிகுத்துக் காட்டி அதனினும் சிறந்த முத்தம் வாய் முத்தம் என்பதனை விளக்குவதற்கு, ''இகபரங்கள் முழுதுந் தருவாய் செழுங்கனிவாய் முத்தம் தருக'' என முத்தத்தின்

வேற்றுமை காட்டுகிருர். இகபரங்கள் தருவாய் என்பதனை இம்மை மறுமை நலங்களைத் தருபவளே என விளியாகக் கொள்வதேயன்றி இம்மை மறுமைப் பயன்களைத் தருகின்ற வாய் என வினைத்தொகைப் பொருள்படுத்தி, அந்தவாய் நின் கனிவாய் அதனிடத்துப் பிறக்கின்ற முத்தத்தைக்கொடு என்று பொருள்படும்படி அமைத்திருப்பது அவருடைய மொழி ஆற்றலையும், கற்பனைத் திறத்தையும் மிகுத்துக்காட்டுகின்றது.

இனி அடிகளார் பாண்டி நாட்டில் பண்டைப் பழம்பதி யாகிய மதுரையின் சிறப்பினை நினைந்து நினைந்து உருகி உருகிப் போற்றுகின்ற நிலையில் காட்டும் கற்பனைத்திறன் மிக மிகச் சுவையுடையது. அவற்றுள்,

*"முன்பும்ப ரரசுசெய் பெரும்பாவ முங்கோவ*
*மூரிமாத் தொடர்சாவமும்*
*மும்மைத் தமிழ்ச் செழியன் வெப்பொடு கொடுங்கூனும்*
*மோசித்த வித்தலத்தின்*
*தன்பெருந் தன்மையை யுணர்ந்திலைகொல் சிவராச*
*தானியாய்ச் சீவன் முத்தித்*
*தலமுமாய்த் துவாதசாந் தத்தலமு மானதித்*
*தலம்".*

[மீ. பி. தமிழ்—69]

என மதுரையின் பெருமையைச் சமயத் தொடர்புடைய உயர்வு களைக் காட்டி விளக்குவது சுவைமிக்கது.

*"தென்னந் தமிழினுடன் பிறந்த*
*சிறுகா லரும்பத் தீயரும்பும்*
*தேமா நிழற்கண் டுஞ்சுமிளஞ்*
*செங்கட் கயவாய்ப் புளிற்றெருமை*
*இன்னம் பசும்புற் கறிக்கல்லா*
*இளங்கன் றுள்ளி மடித்தலநின்*
*றிழிபா லருவி யுவட்டெறிய*
*எறியுந் திரைத்தீம் புனற்பொய்கைப்*
*பொன்னங் கமலப் பசுந்தோட்டுப்*
*பொற்றுதாடிக் கற்றை நிலாப்*
*பொழியுந் தரங்கம் பொறையுயிர்த்த*
*பொன்போற் றெருதோ லடிப்பொலன்சூட்*
*டன்னம் பொலியுந் தமிழ் மதுரை"*

[மீ. பி. தமிழ்—24]

என மதுரையில் வீசுகின்ற காற்றில் முதற் கொண்டு தமிழ் மணம் வீசுகிறது என்று காட்டுகின்ற அழகு கற்பனையின் உயர்நிலைக்குக் கொண்டு போய் விடுகிறது. அடிகளார் வாழ்ந்த நல்வாழ்வில் தில்லையும் திருவாரூரும், தருமையும் தனிச்சிறப்புடைய நகரங்களாகும். அவற்றோடு வேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயிலும் ஒன்று. இவை சோழ நாட்டு நகரங்கள். அடிகளார் சோழ நாட்டில் பல்கால் தங்கி யிருந்த போது அந்நாட்டு நலனும், வளமும், வாழ்வும் அவரைக் கவர்ந்தன. அதனோடு தில்லையும், கமலையும், தருமையும் அடிகளாருக்குச் சமய வாழ்வு பெறுவதற்குப் பெருந்துணையாய் அமைந்தன. ஆகையால் அடிகளார் நீண்ட தொரு நினைவில் விளைந்த சிறப்புடைக் கருத்துக்களை யெல்லாம் சமய எண்ணங்களோடு தொடுத்துச் சோழ நாட்டுச் சிறப்புக் கூறுவதிலும், பொன்னி வளம் பேசுவதிலும், பழம் பதிப் பெருமை காட்டுவதிலும் பிணைத்துப் பிணைத்துப் பாடி மகிழ்கிறார்.

அவற்றுள் இரண்டொன்று கற்பனை நலத்திற்குக் கண்டு மகிழலாம்.

''கொண்டல்கண் படுக்குந் தண்டலை வளைஇத்
தடம்பணை யுடுத்த மருத வைப்பின்
இடம்புரி சுரிமுக வலம்புரி யீன்ற
தெண்ணீர் நித்திலம் வெண்ணில வெறிப்ப
ஊற்றெழு தீம்புனல் பாற்கட லாக
விரிதிரைச் சுருட்டே யரவணை யாகப்
பாசடைக் குழாங்கள் பசுங்கதிர் விரிக்கும்
தேசுகொண் மேனித் திருநிறனுக்
பொற்றுது பொதிந்த சேயிதழ்க் கமலம்
மலர்விழி முதல பலவுறுப் பாக
அங்கணேர் வனசத் தரசு வீற்றிருக்கும்
செங்கா லன்னந் திருமக ளாகப்
பைந்துழாய் முகுந்தன் பள்ளி கொண்டன்ன
அந்தண் பூந்தடம் அளப்பில சூழ்ந்து
பல்வளம் பயின்ற தில்லையம் பதி''

[சி, மு. கோ - 29]

6676 நூலகம் - சென்னை

இப்பாட்டில் பூந்தடத்தைத் திருமால் பள்ளி கொண்டது போலக் கற்பனை செய்திருப்பது சமயத் துறையில் திருமால்

கூத்தப் பிரானுடைய திருவடியைக் காண்பதற்குத் தவங் கிடந்தான் என்பதை மனத்துட் கொண்டு காட்டிய சிறப்பைப் போல் காணப்படுகிறது.

''கருந்தாது கடுத்த பெரும்பணை தாங்கும்
படர்மருப் பெருமைபைங் குவளை குதட்டி
மடிமடை திறந்து வழிந்தபா லருவி
கரைபொரு தலைப்பப் பெருகு பூந்தடத்து
வெண்டோ டவிழ்த்த முண்டகத் தவிசிற்
பானீர் பிரித்துண் டுவெள் ளெகினம்
நூற்பெருங் கடலு ணுண்பொரு டெரித்து
நாற்பயன் கொள்ளு நாமகப் பொருவும்
மென்பான் மருதத் தண்புனற் கமலை''

[தி. நா. மாலை—17[

இந்தப்பாட்டில் அடிகள் பூந்தடத்தை மென்பால் மருதத் தண்புனல் எனக்கூறிக் கமலை என்ற சொல்லிற்கேற்ப நாமகளாகவே கற்பனை செய்திருப்பது அவருடைய அரும் பெரும் கற்பனை ஆற்றலைக் காட்டுகிறது.

'' கள்ளவிழ் நறுங்கொடிகள் கமுகிற் படர்ந்து பூங்
கற்பகத் தும்படர்தலாற்
காமன் பெருஞ்செல்வ மன்னவர்கள் குழுமியக்
கமுகின் கழுத்தில் யாத்த
ஒள்ளொளிய செம்மணிப் பொன்னூசல் பன்முறை
உதைந்தாட வாடுந்தொறும்
ஒண்கமு கொடுந்துணர்ப் பைங்கற் பகக்காடும்
ஒக்கவசை யத்தலையசைத்
தள்ளிலை யலங்கல்வே லெம்பிரானைப்பாடி
ஆடுகின் றுரெனத்தாம்
அலர்மாரி பொழிவபோ லங்கற் பகத்தெய்வம்
அம்பொன் மலர் மாரிதூர்க்கும்
தெள்ளுதமிழ் விரிபுனற் காவிரித்திருநாட''

[மு. பி. தமிழ்—448]

காவிரி நாட்டின் சிறப்பினைத் தன்னை மறந்து தெய்வ உலகத் தோடு ஒப்பிட்டுக் காட்டுகின்ற அழகு தனிச் சிறப்பாகக் காண்கின்றது.

" நெய்வைத்த கூந்தற்பிடிக்குதவ நாற்கோட்டு
நிகளத் தடங்குன்றுவான்
நிமிருங் கதிர்க்குலைச் செந்நெலைப் பாகுபடு
நெட்டிலைக் கன்னல் கொலெனுக்
கைவைத் திடப்பரி முகஞ்செய்து வெய்யோன்
கடும்பரியை நட்புக் கொள்ளும்
கழனிவிரி காவிரித் திருநாட"

[மு. பி. தமிழ்—444]

இனி அடிகளார் புராணக் கதைகளை அகப்பொருள் சுவைபடக் கற்பனைத் திறத்தில் அழகு ஒழுகு தமிழில் வடித்துக் கொடுப்பதைப் படித்தால் தமிழ் உள்ளம் தன்னை மறந்த இன்பம் அடையும்.

" கானக் குறப்பெண் குடியிருந்த
கன்னிப் புனத்துத் தினைமாவும்
கமழ்தேன் றெளிவு முண்டு சுவை
கண்டா யென்றே மதுவல்லால்
மீனத் தடங்க ணவள் மிச்சில்
மிசைந்திட் டதுவு நசைமிக்கு
விரைத்தீங் குமுதத் தமுதடிகள்
விருந்தா டியதும் விண்டோமோ"

[மு. பி. த- 425]

இந்தப் பாட்டில் தேனும் தினைமாவும் வள்ளிக் கொடி மகிழ்ந் தளிக்க உண்டு மகிழ்ந்த சிவகுமாரன் செயலைத் தண்டமிழ்ச் சுவை ததும்ப அகப்பொருள் நயம்பட அமைத்துக் கொடுத் திருப்பது சுவைத்து இன்புறற்பாலது.

" கொழுநாண் மலர்க்கற் பகமு நறைக்
குரவு நாறு நறுங்குஞ்சிக்
கோமான் மகனே நங்கள்குலக்
கொழுந்தே யென்று குறையிரந்து
தொழுவா னவர்த முடிசூட்டும்
சோதி முடியிற் றுகளெழநின்
துணைத்தாள் வண்டற் றுறைப்புழுதித்
தூளி படினும் படுகசுடர்க்

*கழுவா மணியு நிலவு விரி*
*கதிர் நித் திலமு முமையம்மை*
*கண்ணி லுறுத்த வடிகேணின்*
*காலி லுறுத்தல் கடனன்ருற்*
*செழுநான் மறையின் பெருஞ்செல்வச்*
*செருக்கே சிற்றில் சிதையேலே*
*செந்நெற் பழனப் புள்ளூரா*
*சிறியேஞ் சிற்றில் சிதையேலே''*
[மு. பி. தமிழ்—421]

இந்தத் திருபாட்டிலே அடிகள் முருகப் பெருமானுடைய சிறப்பினையும் அந்தத் திருவடியிற் படும் புழுதி உமையம்மை யினுடைய கண்ணில் உறுத்தும் என்று காட்டும் அழகும் நினைந்து நினைந்து மகிழக்கூடிய கற்பனை அமைந்துள்ளது.

*'' வம்மி னெனப்புல வோரை யழைத்திடு*
*வண்கொடை முரச மென*
*வடகலை தென்கலை யொடுபயிலுங்கவி*
*வாணர்க ளோடி வர*
*அம்மென் மடப்பிடி பொன்னுல கீன்றவ*
*ணங்கை மணம் புணரும்*
*அணிகிளர் மணமுர சென்னவெ மையனெ*
*டம்மை மனங்குளிரத்*
*தெம்முனை சாயச் சமர்விளையாடிச்*
*செங்கள வேள்வி செயும்*
*திறன்முர செனவிமை யவர்விழவயரச்*
*செழுநகர் வீதி தொறு*
*மும்முரசமுமதிர் காவிரி நாடன்*
*முழக்குக சிறுபறையே*
*முத்தமிழ் பயில்பரு திப்பதி முருகன்*
*முழக்குக சிறுபறையே.''*
[மு. பி. தமிழ்—437]

இந்தப்பாட்டிலே ஆசிரியன் பிள்ளைப் பெருமான் பறை முழக்குவதாகக் குறிப்பிடுவதனை அம்முருகக் கடவுளின் செயலுக்கேற்பக் கொடைமுரசு, மணமுரசு, படைமுரசு என மும்முரசமாக்கி அம்முரசங்களினுடைய முழக்கத்தை அவன் செயலிற் கேற்பப் பிணைத்துக் கொடுத்திருக்கிற கற்பனை உள்ளத்தை உருகச் செய்கிறது.

''கம்பக் களிற்றுக் கடற்றுனே வீரர்கட்
கடையிற் கடைக்கன லெழக்
கண்டொட் டுணுஞ்சில மருட்பேய் கரிந்தெழு
கடுங்குருதி வெள்ள மூழ்கித்
தும்பைத் தலைச் செம்மயிர்ச் சிகை யினைச்சுடு
கனற்சிகை யெனப்பதைப்பச்
சூட்டிறைச் சிக்குச் சிணுங்குங் குறட்பேய்க்கொர்
சூர்ப்பேய் கொழுந்தசைகள் கோத்
தம்பிற் சுடத்தான் கவந்தமொடு தொந்தமிட்
டாடும் பறந்தலை நிலத்
தானைப் பிணக்குன்று மவுணப் பிணக்காடும்
அளறுபட் டொழிய நின்றோர்
செம்பொற் றடந்தே ருருட்டிவரு சேவகன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே.''

[மு.பி.த.—441]

இந்தப் பாட்டில் அடிகள் குமரப் பெருமானுடைய இளம் பருவத் தேருருட்டலை அப்பெருமானது சூரபதுமன் போரோடு பிணைத்து அப்போர்க்களத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பரணியிற் காணும் களவேள்வி போலப் புறத்திணைச்சுவை ஒழுக அமைத்துக் கொடுத்திருக்கின்ற அருமைப் பாட்டுக் கற்பனைத் திறனைப் படித்து மகிழ்கிறோம்.

இனி இங்ஙனமே படிப்படியாக வளர்ந்து வாழ்க்கையோடு ஒன்றுபடுகிற, ஆன்மீகத்தோடு ஒன்றுபடுகிற கற்பனைச் சுவைகளையும் அடிகளார் அருந்தமிழில் கண்டு மகிழலாம்.

''தொடலைக் குறுந்தொடித் தோகாய்நம் பாவை
படலைச் சிறுமுச்சி யுச்சிப் பசுங்கிள்ளை
பேதைக் குழாத்தொடு நென்னற் பொழுதின்கண்
வீதிக்கே நின்று விளையாட் டயருங்கால்
அஞ்சனக் கண்ணுளுந் தாமு மணிதில்லைச்
செஞ்சடைக் கூத்தனூர் வெள்விடைமேற் சேறலும்
உண்ணெக் குருக வெதிர்ப்பட் டுடையானைக்
கண்ணிற் பிணித்து மனத்திற் கொடுபுக்
கிறைவளை சிந்த வணி துகில் சோரப்
பிறரறியா வண்ணம் புணர்ந்தும் புணராள்போல்

மையுண்கண் ணீர்சோரச் சோர்தலும் வார்குழலார்
கைகோத் தெடுத்துக் கடிமனை கொண்டுய்ப்பப்
பைந்தண் குளிரி படுத்துக் கிடத்தலும்
செந்தீப் பிழம்பிற் கிடத்திச் செருச்செய்வ
தந்தோ கொடிதுகொடி தென்செய்தீ ரன்னைமீர்.''

[சி.செ. கோவை—542]

இந்தப் பாட்டில் பேதைப் பருவத்தாள் ஒருத்தி உலாப் போந்த பாட்டுடைத்தலைவன் மேல் காதல் நெஞ்சினால் கருத்தழிந்த திறத்தினை உலாப்புற இலக்கண அமைதி முழுதும் பொருத்திக் காட்டியிருப்பது அடிகளாருடைய கற்பனைத் திறத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு.

''கொடியு முரசுங் கொற்ற வெண்குடையும்
பிறர்கொளப் பொருஅன் றனே கொண்டு
பொதுநீங்கு திகிரி திசை திசை போக்கிச்
செவியிற் கண்டு கண்ணிற்கூறி
இருநிலம் புரக்கு மொருபெரு வேந்தன்
மிக்கோ னொருவன் வெறுக்கை நோக்குழித்
தொக்கதன் வெறுக்கை சுருங்கித் தோன்ற
இழப்புறு விழும மெய்தி யழுக்கறுத்து
மற்றது பெறுதற் குற்றன தெரீஇ
அயிற்சுவை பெருஅன் றுயிற்சுவை யுருஅன்
மாணிழை மகளிர் தோணலங் கொளாஅன்
சிறுகாற்று வழங்காப் பெருமூச் செறிந்து
கவலையுற் றழிவதூஉங் காண்டும் விறகெடுத்
தூர்தொறுஞ் சுமந்து விற்றுக் கூலிகொண்டு
புற்கையு மடகு மாந்தி மக்களொடு
மனையும் பிறவு நோக்கி யயன்மனை
முயற்சியின் மகனை யிழித்தன னெள்ளி
எனக்கிணை யிலையென வினையன் மற்றொருவன்
மனக்களிப் புறீஇ மகிழ்வதூஉங் காண்டும், அதனால்
செல்வ மென்பது சிந்தையி னிறைவே
அல்கா நல்குர வவாவெனப் படுமே.''

[சி.மு. கோவை—475]

இந்தப் பகுதியில் அடிகளார் வறுமைக்கும், செல்வத்திற்கும் உள்ள வேற்றுமையைத் தெரிவிக்க வேண்டிச் செல்வ முடைமை செல்வமாகாது. பொருளின்மை வறுமை ஆகாது மன நிறைவும், மனக்குறைவுமே செல்வமும், வறுமையும் என்பதற்கு எடுத்துக்காட்டின இரு பேருண்மைகள் அடி

-களார்க்கு உள்ள மனேதத்துவ அறிவும், உலகியல் நுட்பமும், வாழ்வின் மலர்ச்சியும் தெற்றென விளங்கியிருக்கிறது என்ப தற்கும் அதனை எடுத்துக் காட்டும் திறம்பாட்டிற்கும் நாம் என்றும் கடமைப் பட்டுள்ளோம்.

அம்புலிப் பருவத்தில் நிலவோடு பாட்டுடைத் தலைமகனை ஒன்றுபடுத்திக் காட்டுவதற்குப் புலவர்கள் கையாள்வது இரு பொருள் படும்படியான சிலேடை அணியாகும். அதனைப் பெரிதும் செம்மொழிச் சிலேடையாகப் பாடுவது பாடுவோனு டைய மொழித்திறத்தையும், சுவைநலனையும் பொறுத்த தாகும். அடிகள் முருகப் பெருமானை நிலவோடு ஒப்புமைப் படுத்தும் பொழுது பெரிதும் செம்மொழிச் சிலேடையாகவே காட்டியிருக்கின்ற அழகினை மொழி அறிஞர் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

*''சொற்றரு பெரும்புலவர் கலையமுது கொளவிருந்*
*தோகைமேல் கொண்டருளினுய்*
*தோற்றிமுன் பொங்கிமலை போலவலை மோதுமச்*
*சோதிவே லையுமுகந்தாய்*
*குற்றமில் குணத்தைக் குறித்த விர வலர்முகம்*
*கோடா தளித்தல் செய்தாய்*
*கோகனக நாயகன் வரக்கூவிடுங்குக்*
*குடங்கொடிய தாக வைத்தாய்*
*உற்றிடு மிதழ்க்குமுதம் விண்டுதண் டேனெழுக*
*ஒளிநிலா நகைமுகிழ்த்தாய்*
*உன்செய்கை யெம்பிரான் றன்செய்கை போலுமால்''*
[மு.பி.த.—411]

என்ற திருப்பாட்டில் அடிகளாருடைய இருபொருள்பட நயம் படத் தொடுக்கும் மொழியாற்றலும் கண்டு மகிழ்கிறோம்.

*''பைந்தண் கமல வட்டவணைப்*
*பாவை யனையார் பூவிரியும்*
*பசு மென் குழற்கூட் டகிற்புகையின்*
*படல மூட முடை நறவின்*
*கந்தம் பொதிந்த செந்துவர்வாய்க்*
*கடைசி மகளிர் செந்நெலைப் பைங்*
*கன்ன லெனவுங் கன்னலைப் பூங்*
*கமுக மெனவுங் கடைக் கூடாத்*
*தந்தங் கருத்துக் கமைந்த படி*
*சாற்றிச் சாற்றி முழுமாயச்*

*சலதி மூழ்கித் தடுமாறும்*
*சமயத் தவர்போற் றலை மயங்கும்*
*அந்தண் பழனக் கந்தபுரிக்*
*கரசே வருக வருகவே*
*அருளா னந்தக் கடற்பிறந்த*
*அமுதே வருக வருகவே.''*

[மு. பி. தமிழ்—405]

இந்தத் திருப்பாட்டில் மருத நிலச் செழிப்பினைக் காட்டப் புகுந்து அதனில் வாழ்ந்த கடைசியர் மகளிரே, செந்நெலைக் கன்னலெனவும், கன்னலைக் கமுகெனவும் அறிய முடியாது மயங்கும் அத்தனை வளமுடைய மருத நில வைப்பு எனக்காட்டி அதற்கு உவமை கொடுக்க வந்த பொழுது முழுமாயச் சலதி மூழ்கித் தடுமாறும் சமயத்தவர் போல் எனக் கூறுவது அடிகளாருடைய சமய வேற்றுமை களைந்த தெளிந்த உள்ளத்தினையும் தெளிவு படுத்தற்கு எழுந்த கற்பனையாகக் கொள்ளலாம். கன்னல் கன்னல்தான், செந்நெல் செந்நெல்தான், கமுகு கமுகுதான். ஆனால் நிலத்தின் வளத்தால் செந்நெல் கன்னல் போலவும், கன்னல் கமுகு போலவும் காட்சியளிக்கிறது. மயக்க உணர்வு பொருளில் இல்லை. காண்பான் இடத்தில்தான் இருக்கிறது. அதுபோலச் செம்பொருளாகிய ஒன்று தன்னிலையில் தனித்து நிற்கிறது. ஆனால் காணுகின்ற சமயவாதி தான்கண்டவாறே கண்டு காட்டுகிறான் ஆகையால் காணுவோனுடைய மயக்கமே தவிரக் காணுகின்ற பொருளில் மயக்கம் இல்லை, என்று தெளிவு செய்கிறார். இப்படிப் பல. இனி அடிகள் தம் நுண்மாண் நுழை புலத்தினால் தமிழ்நாடு தவப்பயனால் பெற்ற திருக்குறளின் அரும் பொருள் விளக்கத்தினைப் பல தமிழ் நீதிநூல்களோடு ஒப்பநாடி வெண்பா யாப்பினால் யாத்த நீதி நெறி விளக்கம் என்ற அரிய நூலில் பல இன்சுவைக்கற்பனை களைக் காணலாம். அவற்றுள் முதலாவதாக அரசு செல்வம் பெற்றான் ஒரு மகன் செல்வப் பயனைத் துய்க்குங் காலத்துத் தன்னின் எளியார் மாட்டு இரங்கி ஈந்துவக்கும் இன்பப் பேறு பெற்று வாழக் கடமைப்பட்டவன், என்பதனை உணர்த்த வருகிறார். அதனைப் பிறிது மொழிதல் என்னும் அணியின்பாற் படுத்தி உவமையைக் கூறிப் பொருளை உணர வைக்கும் திறன் மிகவும் போற்றற்குரியதாய் அமைந்துள்ளது.

*''வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்*
*தூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண்*
*டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால்*
*ஆருங் கிளையோ டயின்று.''*

[நீ. வி. 37.]

இந்தப் பாட்டில் உயிர்களுள் எறும்பையும், யானையையும் எடுத்து யானை முதலாக எறும்பீருக என்ற உடற்பெருமை சிறுமையைக் காட்டி யானையின் உணவில் உண்ணும் பொழுதில் சிதறுகிற உயர்ந்த உணவு கோடி கோடி எறும்பு உண்டு வாழ் வதற்கு வழியாய் அமைகிறது. அதனுல் சிதறின உணவினுல் யானை குறைபடுவதில்லை. ஆனுல் அவ்வுணவை உண்ட எறும்பு கள் உயர்ந்த இன்ப நுகர்ச்சிபெற்று வாழ்கின்றன. என்பதனுல் செல்வம் உடையான் தான் துய்ப்பதற்கென்று செய்கின்ற செலவில் தான் அறிந்தோ அறியாமலோ தன்னேடு வாழு கின்ற ஏழை மக்களுக்குப் பயன்பட்டு வாழ்வானுனுல் அதனுல் அவன் செல்வம் குறைவதில்லை. மக்கள் வாழ்வு நிறைவு பெறு கிறது என்ற பேருண்மையினை அவர் கற்பனை செய்து காட்டுவது நினைத்து மகிழற்பாலது.

நல்லொழுக்கம் நல்லொழுக்கம் என்று நாம் பேசுகின்ற ஒன்று என்ன என்பதனை வரைந்து கொள்வதற்கு ஆசிரியர் இலக்கணம் வகுத்துக் கொடுக்கிருர். அது மனித வாழ்வில் கடைக்கூட்டுவதற்கு ஒரு வழி என்பதனைத் தெளிவு செய்யும் முகத்தான் மனம், சொல், செயல் ஆகிய மூன்றையும் எப்படிச் செலுத்துவது என்று நீதி நூல்களில் பல இடங்களில் காணப் படுகின்ற அறவழிகளைத் தொகுத்து ஒரு வெண்பாவில் கொடுக்கின்ற அழகு அவருடைய கருத்தாழத்தை அறிந்து கொள்ளச் செய்கிறது.

*''பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்*
*எய்தாமை சொல்லின் வழுக்காத்து—மெய்யிற்*
*புலமைந்துங் காத்து மனமா சகற்றும்*
*நலமன்றே நல்லா றெனல்.''*

[நீ. வி. 265.]

மனித வாழ்வைக் குறிக்கோளுடையதாகச் செலுத்த வேண்டும். மனித வாழ்வே ஒரு வழிப்பயணம். அது சென்று முடிகின்ற இடம் சிறந்த இடமாய் அமைய வேண்டும் என்று எல்லோரும் கருதுவர். அக்குறிக்கோளுடைய வாழ்வை எப்படிச் செலுத்துவது என்பதில் தான் கருத்து வேற்றுமை பலவாய் அமையும். அவ்வாறு வருகின்ற பல கருத்துக்களையும் தொகுத்து இதுதான் முடிந்தமுடிபு எனத் தெளிவு செய்வது அறிவினுல் பெற்ற பயனுகும். அங்ஙனம் கூறுவது அனைவரும் ஏற்கக் கூடியதாகவும், அனைவர்க்கும் பொருந்துவதாகவும் நாடு, மொழி, சமயங் கடந்த நற்கருத்தாய் அமைதல் வேண்டும். அங்ஙனம் கருதிய திருவள்ளுவனுரின் வழிநின்று மனித வாழ்வு இலட்சியவாழ்வாக அமைய வேண்டும் என்ற

ஒரே நோக்கத்தோடு நெறி முறைகளை நீதி நெறி விளக்கத்தின் இறுதியில் முடித்துக் கொடுக்கிருர். அந்த நீதி வெண்பா மக்கட் சமுதாயத்தை நன்னெறிப்படுத்தும் நல்ல ஊன்றுகோலாக அமைந்துள்ளது. அதனைக் கூறிக் கற்பனைத் திறம் என்ற பகுதியை நிறைவு செய்கிறேன்.

*''கற்ருங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்ருற்றிப்*
*பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே*
*பற்றுவதே பற்றிப் பணியறநின் ருென்றுணர்ந்து*
*நிற்பாரே நீணெறிச்சென் ருர்.''*

[நீ. வி. 306.]

# குமரகுருபரரின் சமயக் கோட்பாடு

நம்முடைய தமிழ்நாட்டிலே புலவர்கள் பண்டைக் காலந் தொட்டு மொழிவளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் தொண்டு செய்தது போலவே, மக்களாகப் பிறந்தவர்கள் நல் வாழ்வு வாழ்வதோடு ஆன்மீகமலர்ச்சியும் பெறவேண்டு மென்று இடையருது உழைத்து வந்துள்ளனர். சங்க இலக்கியங்களென்று பேசப்படும் அந்நூல்களில் கூடக் கடவுள் உணர்ச்சி வேண்டுமென்ற கருத்தினுல் பத்துப்பாட்டில் முதற் பாட்டு திருமுருகாற்றுப் படையாகவும், பிற தொகை நூல்களில் முதற்பாட்டு கடவுள் வாழ்த்துப் பாடல்களாகவும், அமைந்துள்ளமையை நாமறிவோம். உலகப் பொதுநூல் யாத்த திருவள்ளுவருங் கூடக் கடவுள் வாழ்த்து என முன்னிருத்தி நூல் யாத்தமையை நன்கு உணரலாம். இங்ஙனம் வழிவழி வருகின்ற வளர்ச்சியிலே சமய உணர்வு ஆன்மீக வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது என்ற முடிவுக்கு வந்து பிற்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் சமயக்கருத்துக்களைத் தன்னகத்துக் கொண்டு விளங்குவவாயின. அல்லாமலும் கி. பி. ஆரும் நூற்ருண்டுக்குப் பிறகு தமிழ் நாட்டில் அருளாளர்களுடைய வாழ்வினுல் சமய மறுமலர்ச்சி உண்டாகி, சமுதாயத்தில் சமய எண்ணங்கள் வேரூன்றத் தொடங்கின. அதனுல் சமுதாயத்துத் தோன்று கின்ற புலவனும் சமய எண்ணங்களோடு கூடவே தன்னுடைய அறிவு நலனையும் வெளிப்படுத்துவானுயினுன். இந்த அடிப்படையான உண்மையில் வளர்ந்த இலக்கியங்கள் அத்தனையும் தமிழ் நாட்டில் வழிபாட்டுக் குரியதாய் அமைந் திருந்த சமுதாய வாழ்வோடு பிரிக்க முடியாமல் பின்னிப் பிணைந்திருந்த சைவ, வைணவத் தொடர்புடைய நூல் களாகவே வெளிவரலாயின. குமர குருபர அடிகள் தோன்றின காலமும், அவர்கள் பிறந்த குடியும், அவர்களோடு வாழ்ந்த சமுதாயமும், அன்றைய நிலையில் சமயவாழ்வோடு சிறந்திருந் தனவாதலின் அவர்கள் படைத்த இலக்கியங்கள் அத்தனையும் அங்ஙனமே சைவ சமயச் சார்புடையவாய் அமைந்தன. அவர்கள் செய்த ஒரே நூலாகிய நீதிநெறி விளக்கம் என்ற அறநூலும்,

*நீரிற் குமிழி இளமை நிறை செல்வம்*
*நீரில் சுருட்டும் நெடுந் திரைகள்-நீரில்*
*எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே*
*வழுத்தாதது எம்பிரான் மன்று''*

[நீ. வி. 1]

இந்தப் பாட்டினை முன்ஞகக் கொண்டு மிளிர்கிறது. இளமை நிலையாமை, செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை என்ற நீதிகளைச் சொல்ல வந்து அவற்றிற்கு உவமையாக நீரில் குமிழியும், நீரில் அலையும், நீரில் எழுத்தும் எடுத்துக் காட்டி நிலையாமையை வற்புறுத்துவதோடு நில்லாது அதற்கு மேலாக நிலையாமையுடைய வாழ்க்கையில் பெறவேண்டிய நிலைத்த பேருகிய ஒன்றனைச் சுட்ட எம்பிரான் மன்று வழுத்து என முடித்துக் கொடுக்கும் பொழுது அவர்களுடைய சமய உணர்வு நீதிநெறி வழியும் நிற்கிறது என்பதனை வெளிப் படுத்துகிறது. அதனுல் தான் நம்முடைய சான்ருேர்கள் பிற்காலத்தில் வாழ்வியலோடு ஒட்டி வளர்ந்து விட்ட சமயத்தைப் புறக் கணிக்காதும், போற்றியும் அதனேடு அதனையே முதன்மை யாக வைத்தும், அதுதான் வாழ்வின் குறிக்கோள் என்றும் வற்புறுத்துவாராயினர். அல்லாமலும் ஒரு நூல்எத்தனை மொழி யழகும் எத்தனைப் பொருட்சுவையும் அமைந்திருப்பினும் சமய உணர்வினைக் குறிக்கோளாகக் கொள்ளாமற் போனுல் அது நூலாகாது என்ற அடிப்படையில்,

*''அறம் பொருளின்பம் வீடு அடைதல் நூற்பயனே''*

எனக் கூறி முடிப்பாராயினர். இதனுல் வீடடைதற்கு மனித வாழ்வைத் துறைப்படுத்துகின்ற சமய எண்ணங்களை வற்புறுத்திக் கூறுவது நூலின் பயன் எனக் கருதினர். அங்ஙனம் இல்லையாஞல் எத்தனைச் சிறப்புடைய நூலாயினும் உயிரற்ற உடம்பு போலச் சமுதாயம் புறக்கணிக்கச் செய்தது. ஒரு நூற்ருண்டுக்கு முன்னே சங்க இலக்கியங்களும் சிலப்பதி காரம் சிந்தாமணி போன்ற பெருநூல்களும் பிறபல இலக்கியங்களும் செல்வாக்கின்றித் தேய்ந்தமைக்கு, சமுதாயத்தில் சிறப்புப் பெருமைக்கு இதுவும் ஒரு காரண மாகும். ஆகையால் குமர குருபரர் காலத்தொடு பட்ட புலவராதலின் அன்றைய சமுதாயத்தின் அடிப்படையிலும், அவர் தோன்றின குடிப்பிறப்பின் சிறப்பு நிலையிலும் நின்று வளர்ந்து வாழ்க்கையின் குறிக்கோளைக் கடைப்பிடித்துத் தம் நூலறிவினுலும், நுண்ணறிவினுலும் தெளிந்த உண்மைகளை வைதிக சைவ சித்தாந்தச் சமயச் சார்போடு பிணைத்துப் பேசுவாராயினர். அன்றியும் அறிவு வளம் பெற்றுத் தெளிவு

காணும் போது மனித வளர்ச்சியில் அன்பிலே ஊற்றெழுந்து அருள் வேட்கையைத் தூண்டுமாதலின் அடிகளுடைய எண்ணங்கள் அறிவின் தெளிவுகள் அன்புச் சமயமாகிய, அருளைக் கூட்டும் சமயமாகிய சைவசமய உண்மையில் தோய்ந்தன. அந்தப் பேருண்மைகளை அனுபவமுகத்தினாலும் அடைந்து பேரானந்தப் பெருவாழ்வில் திளைக்க வேண்டும் என்ற உறுதியான கடைப்பிடியும் அடிகளுக்கு இருந்தது. அந்த வேட்கை அடிகளுடைய வாழ்வில் கமலை மாசிலாமணி தேசிகருடைய திருவருளால் நிறைவு பெற்றது. ஆகவே, சைவ சமயமே சமயம் என்றார்.

*''சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதில்சார்சிவமாம்*
*தெய்வத்தின் மேல்தெய்வம் இல்''* (தாயுமானவர்)

என்றும் கூறுகின்ற உண்மை உரைகளின் படிச் சைவ சமய மெய்யன்பராய்ச் சமய ஒழுக்க சீலராய், சமயப் பேரறிஞராய் சிவானுபவம் பெற்ற சிவஞானியாய்விளங்கினார். அதனால், அவர்களுடைய படைப்புக்களாகிய நூல்களிலும் சிவபக்தியும் சிவனடியார் பத்தியும், சைவ ஒழுக்கப் பெருமையும், சமய உண்மைகளின் தெளிவும், சிவஞானத்தின் வெளிப்பாடும் தொட்ட தொட்ட இடந்தோறும் தெற்றென விளங்கும்.

அடிகளார் சைவ சமய உண்மைகளைத் தேவார, திருவாசகங்களாகிய திருமுறைகளைக் கொண்டும், சிவ ஞான போதம் முதலாய சாத்திரங்களைக் கொண்டும் அன்பின் பெருக்கிற்கும், தத்துவ விளக்கத்திற்கும், தனக்கேயுரிய அழகு தமிழால் வடித்துக் கொடுத்திருக்கிறார், வைதிக சைவ சித்தாந்தம் என்பதனை, வேதம் பொது சைவம் சிறப்பு என்ற முறையில் வகுத்துக் கொண்டு, பொது நூலில் காணும் மறை பொருளைச் சிறப்பு நூலாகிய சைவ நூல் களிலே தெளிவு பெற முடியும்; தெளிவு பெறுகிறோம்--என்பதனை விளக்கமாகக் காட்டியிருக்கிறார். அறியாமை யினின்றும் நீங்கி, இதுவோ அதுவோ என்னும் ஐயத்தின் வழி வந்து, இதுதான் பொருள் என்ற தெளிவு பெறுவது அளவை முறைப்படி உண்மையாகலின் உயிர்களாகிய நாம் அறியாமையில் மூழ்கி, இதுவோ அதுவோ என்ற அறிவுக் கலக்கத்திற்கு வந்து தான் இது, செம்பொருள் என்ற தெளிவு பெறுவது என்ற முடிவைத் தெளிவு செய்வது சமய உண்மையை அறிந்து கொள்ளும் வழியாகும். திருவள்ளுவனார்,

*''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்*
*செம்பொருள் காண்ப தறிவு,''*
*''ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்*
*வானம் நணிய துடைத்து,''* என்று

கூறும் இரு குறள்களினுல் அறியாமை, ஐயம், தெளிவு என்ற மூன்றை முறைப்படுத்தி வழங்கியிருக்கும் உண்மை வழிப்படிச் சைவ சித்தாந்தம் என்ற பேருண்மைச் சமயம் முடிந்த முடி பாகிய உண்மைப் பொருளை உயிர்களின் தெளிந்த பயனைக் காட்டி முடிக்கிறது என்று ஆசிரியர் தெளிவு செய்திருக்கிருர். ஆகையால், அன்பு, அறிவு என்ற இரண்டு வளர்ச்சி பெறும் பொழுது, வளர்ந்து நிறைவு பெறும் பொழுது அருளாய், ஞானமாய் உயிர்கட்கு இறை அனுபவத்தை உண்டாக்கி, அழியாத பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்கிறது என்ற படி நிலேகளை உயிர்களினிடத்தில் அறிவும் அன்பும் விதையாய்த் தோன்றி முளைத்துச் செழித்துப் பூத்துக் காய்த்து, அருளாகக் கனிந்து இன்பமாகிய பயனைத் துய்க்க வைக்கிறது என்று சமய உண்மைகளை வாழ்க்கையோடு ஒட்டிக் காட்டுகின்ற பெருஞ்சிறப்பினை அடிகளாருடைய வாக்கில் காணலாம்.

முதலாவதாகச் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்று சாத்திரங்களில் பேசப்படும் வேற்றுமைப் பட்ட உயிர்நிலேகளை மும்மலமுடையார், இருமலமுடையார், ஒரு மலமுடையார் எனவகுத்து இறைவனுடைய திருவருள் இம் மூவகையினருக் கும் அவரவரினுடைய நிலேக்கேற்ப அருள் செய்யும் முறை யினைச் சாத்திரங்களில் கூறியாங்கு காட்டுகின்ற முறை

*''கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்*
*குருபரனென் ருேர்திருப்பேர் கொண்டு-திருநோக்கால்*
*ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்*
*ஏழுமத்து வாக்க ளிருமூன்றும் — பாழாக*
*ஆணவ மான படலங் கிழித்தறிவிற்*
*காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப் பூணும்*
*அடிஞானத் தாற்பொருளு மான்மாவுங் காட்டிக்*
*கடியார் புவனமுற்றுங் காட்டி — முடியாது*
*தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கும்*
*நீக்கமற நின்ற நிலேகாட்டிப் --- போக்கும்*
*வரவு நினைப்பு மறப்பும் பகலும்*
*இரவுங் கடந்துலவா இன்பம் — மருவித்துக்*
*கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும்*
*வன்மழுவு மானுமுடன் மால்விடைமேல்-மின்னிடத்துப்*
*பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்*

*வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த*
*கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய் துண்ணின்*
*றொருமலத்தார்க் கின்பம் உதவி"—*

என்பதில் இறைவன் சகலர்களாகிய மும்மலமுடைய நமக்குக் குருபரன் என்றோர் திருப்பேர் கொண்டு அருள் நோக்கால் ஊழ்வினையைப் போக்கி உடல் அறுபத்தெட்டும் நிலம் ஏழும், அத்துவாக்கள் இருமூன்றும் பாழாக, ஆணவ மான படலம் கிழித்து அறிவில் காணரிய மெய்ஞ்ஞானக் கண் காட்டி என்ற வரையில் சாத்திரங்களிற் கூறியுள்ள வினை நீக்கத்திற்குரிய வழியும், உடல் நீக்கத்திற்குரிய வழியும் அத்துவாக்களின் முறையும் தெளிவு செய்துள்ள திறப்பாடு மிக நுட்பமாக விளங்குகிறது. இந்த அத்துவாக்களே இறைவனுடைய திருவுருவாக அமையும் பொழுது,

*"மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்*
*தொந்தமுறும் வன்னமே தொக்காகப்-பந்தனையால்*
*ஒத்த புவனத் துருவே யுரோமமாத்*
*தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த*
*கலையே அவயவமாக் காட்டுமத்து வாவின்*
*நிலையே வடிவமா நின்றோய் ....."என்று*

இந்தப்பகுதியில் அந்த ஆறு அத்துவாக்களும் இறைவன் திருமேனியாக விளங்குவதைத் தெளிவு செய்திருப்பதைக் காண்கிறோம். வேதம் பொது; அஃதனைத்தையும் கூறும் இயல்பிற்று; அதனை இறைவனே சொன்னான்; அதனால், தன்னுடைய நிலையினைத் தானே சொல்வது கூடாதாகையினாலே மறைத்து உணரும் படி வைத்தான்! அல்லதூஉம் முத்தொழிற் படுக்கும் முதல்வர்களைத் தேவர்களெனக் கூறி, அத்தேவர்களுள் முதல் வன்எனக்காட்டினான்; உலகத்தில் ஒரு பொருளின் ஏற்றத்தைக் குறிப்பிடும் பொழுது அந்த சாதிப் பொருளைக் குறிப்பிட்டு அதில் சிறந்தது என்று சொல்வது வழக்கு. மரங்களில் கற்பகம் விலங்கினில் அரிமா, பறவையில் கலுழன் என்பது போலத் தேவருள் தேவன், மூவருள் முதல்வன் என்று கூறுவதாயிற்று; இங்ஙனம் சிறப்பு நிலையிற் கூறுது பொது நிலையிற் கூறித் தெளிவுபடக் கூறுது உணரும்படிக் கூறியிருப்பதுதான் வேதம். அதனால் தான் அதற்கு மறை எனப் பெயர் வந்தது, என வேதம் பொதுநூல் என்பதையும், அஃது இறைவன் மொழி என்பதனையும், அவ்வேதத்து இறைநிலையை வெளிப்படையாகக் காண முடியாது என்பதனையும் கூறி மறை என்ற அருந்தமிழ்ச் சொல்லுக்குப் பொருள் விளக்கம் காணுகிறார்.

"விலங்கினுண் மிக்கது விண்ணவர் தருவென
ஒருங்குவைத் தெண்ணுவ தோர்வழக் கன்மையின்
ஒத்த சாதியி னுயர்புமற் றிழிபும்
வைத்தன ரல்லதை வகுத்தனர் யாரே
ஆருயிர்க் கமைத்த வோரெழு பிறப்பினுள்
முற்படு தேவருண் முதல்வனென் றெடுத்துக்
கற்பனை கடந்த கடவுணிற் பழிச்சும்
தொன்மறைக் குலங்கள் முன்னிய தியாதெனப்
பன்முறை தெரிப்பினும் பயன்கொள வரிதால்
தேவரின் ஒருவனென் றியாவரு மருளுற
நீயே நின்னிலை நிகழாது மறைத்துக்
கூறிய தாகும் ஆகலிற்
றேறினர் மறையெனச் செப்பினர் நன்கே!"
(திருவாரூர் நான் மணிமாலை)

ஆமையோ டணிந்து தலையோ டேந்தி
காமரு மடந்தையர் கடைதொறும் கடைதொறும்
பலிதேர்ந் துண்ணினும் உண்ணும்.........
"பற்றலர்ச் செகுத்தும் உற்றவர்த் தாங்கியும்
பரசுநர் பரச பணிகுநர் பணிய
அரசுவீற் றிருக்கினும் இருக்கும்........
காமம் மீதூற ஏமுற் றிரந்துஅவள்
தாமரைச் சீரடி தைவந் தம்ம!
புலவியிற் புலந்தும் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும் யோகிகட்
கெய்தா ஒண்பொருள் கைவந்து கிடைப்ப
ஞான முத்திரை சாத்தி மோனமோடு
யோகுசெய் திருப்பினு மிருக்கும்......

என்று முரண்பட்ட பலவகை நிலைகளில் இறைவனுடைய அருட் செயல்களைக் காட்டி இத்தனை நிலைகளிலும் இருப்பவன் இறைவனே என்பதனை வெளிப்படுத்தி, அதனால் அவன் நிலையினை மக்களாகிய நாம் சிற்றறிவின் துணைகொண்டு அறிந்து கொள்ள முடியாது என்பதனையும்,

"கற்பனை கடந்து நிற்றலின் கண்ணுதற்கடவுள்
நிற்பது இந்நிலையினும் நியமமோ இன்று"

என்று முடித்துக் கொடுக்கிறூர். வேதமானது எழுதாக் கிளவி என்றும், இறைவன் மொழி என்றும் பேசப் படுதலின் அதிற் கூறப்படும் மறைபொருள்கள் உணரப்படுவனவே தவிர ஓதப்படுவன அல்ல. அஃதுணராது வேதத்தில் பொருளை

அறிவதற்கு மயக்கம் உள்ளது என்று கூறுவதுதவறு. அதில் அவ்வாறுதான் இருக்கும். அதனை உணர்ந்தோர் தெளிவு பெறுவர். உணர முடியாதோர் மயங்குவர் என்பதனை,

''தன்னுடை மயக்கந் திசைமேல் வைத்துச்
சென்னெறி பிழைத்தோன் திசைமயங் கிற்றென
மொழிகுவ தேய்ப்ப முதுக்குறைவு இன்மையின்
பழமறை மயங்கிற் றென்னு முழுவதும்
எய்யா திசைக்குதும் போலும்
ஐயநின் தன்மை அளப்பரி தெமக்கே.........

(திருவாரூர் நான்மணிமாலை 29)

என்பதனுல் விளக்கம் செய்கிருர். இனி ஆசிரியர் சிவனடியார் திறத்துக் காட்டும் அன்பினை விளக்கும் முகத்தால் வேண்டு கோள் விடுகிருர் தில்லைக் கூத்தப் பெருமானிடத்தில். தில்லை வாண! வரமொன்று இங்கு எனக்கு அருளல் வேண்டும் எனக் கூறி அதுவே பெரும் குளிர்க்கு உடைந்தகாலை கருந் துணிபல துடைத்திசைத்த ஒரு துணியும், கிடக்கைக்குக் கடைப் புறத்தெண்ணெயும், அரும் பசிக்கு உப்பின்றி அட்ட புற்கை ஊனும் அன்றி வேண்டா. ஆனுல், நாளும் ஒழுக்கம் நிறைந்த விழுப்பெருங் கேள்வி மெய்த்தவர் குழாத்தொடும் வைக இத்திறம் உடல் நீங்கு அளவும் வேண்டும் என்று கேட்பது அடிகளார் அடியார் மாட்டு வைத்திருக்கும் அன்புப் பெருக்கை வெளிப்படுத்துகிறது. கருணையொடு நிலையில் பொருளும், நிலையியற் பொருளும் உலையா மரபின் உளங் கொளப் படுத்திப் புல்லறிவு அகற்றி நல்லறிவு கொளீஇ எம்மனேரையும் இடித்து வரைநிறுத்திச் செம்மை செய்து அருளத் திருவுருக் கொண்ட நற்றவத் தொண்டர் கூட்டம் வேண்டும் என்று வேண்டுவது அடியார்கள்பால் வைத் திருக்கும் பெரும்மதிப்பையும் அதனுற்பெரும் பேற்றையும் விளக்குவதாக அமைகிறது. இறைவனுடைய அருட்செயலை உயிர்கள் அவனருள் உணர்த்தினுலன்றி உணரமுடியாது என்பதனையும், உயிர்கள் அனைத்தையும் அறிகின்ற நிறை யறிவு பெற முடியாது என்பதனையும் அடிகளார்,

''நின்பெருந் தன்மை நீயே யிரங்கி
உள்நின்று உணர்த்த வுணரின் அல்லதை
நுண்ணூல் எண்ணி நுணங்க நாடிப்
பழுதின் றெண்ணிப் பகர்தும் யாமெனின்
முழுது மியாரே முதுக்குறைந் தோரே!''

(சிதம்பர மு. ம. கோவை)

என்று கூறுவதனுல் உயிரறிவினுடைய குறைத் தன்மையைத் தெளிவு செய்திருக்கிருர். அடிகள் திருவாசகத்தினிடத்தும், திருக் கோவையாரிடத்தும் வைத்திருந்த அளவிலாக் காதலே வெளிப்படுத்தும் முகத்தான் அகனேந்திணே தழுவிய காமப் பனுவலாகிய திருக்கோவையாரைச் சிறப்பித்துச் சொல்ல வரும்பொழுது அஃது எப்பொருளேச் சுட்டுகின்ற தென்பதனேத் தெளிவு செய்து காட்டுகிருர்.

''பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணே யுறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமஞ் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருளெனச் சுட்டிய ஒருபெருஞ் செல்வன்''

என்று சுட்டுவதனுல் அறிகிறேம். உலக வாழ்க்கையில் மக்கள் காம வயத்தராய்ப் பலதிறத்து உழன்று பொருள் வேட்டையால் அரிது முயன்று நிலேபெற்ற வாழ்க்கை வாழ முடியாது தவிக்கின்றதன்மையைத் தன்மேல் ஏற்றிக்கொண்டு கூறுபவரைப் போல ஆணவம் என்னும் மூல மலத்தோடு கட்டுண்ட உயிர் எப்படிச் சிறிது சிறிதாகப் பலவகைப் பிணேப்புக்களே உடையதாய் வந்து முப்பத்தாறு தத்துவங்களோடு ஒன்றி வாழ்கின்றன என்பதனேயும், அதனுல் உயிர்கள் பெறும் பயன் இன்னது என்பதனேயும் உருவக முகத்தான் சாத்திரத்தின் உட்பொருளே மிக அழகுபட எடுத்துக் காட்டி இந்தத் தத்துவக் கூட்டங்களினின்றும் பிரிந்து எந்த இன்பப்பேற்றினே அடைய வேண்டும் என்பதனேயும் மிக அழகாக உருவகம் செய்திருப்பதனேயும் கீழ்வரும் அருமைப் பாட்டினுல் அறியலாம்.

''ஈதொன் றியம்புவல் கேண்மதி பெரும
அலேயா மரபின் ஆணவக் கொடியெனும்
பலர்புகழ் சேரிப் பரத்தையொடு தழீஇ
ஏகலன் தணந்தாங் கென்னேயு முணராது
மோகமொ டழுந்தி முயங்குறும் அமையத்து
அங்கவட் குரிய தங்கையர் இருவருட்
குடிலே என்னு மடவரல் ஒருத்தி
எய்தரும் புதல்வியர் ஐவரைப் பெற்றனள்
மோகினி என்பவள் மூவரைப் பயந்தனள்
ஆகிய புதல்வியர் அங்கவர் மூவருட்
கலேயெனப் பெயரிய கணிகைமற் றெருத்தி
தானு மூவரைத் தந்தனள் அவருள்
மானெனப் பட்ட மடவரல் ஒருத்தி

எண்மூன் று திறத்தரை ஈன் றனள் இத்திறம்
நண்ணிய மடந்தையர் ஐயெழு வரையும்
கிளப்பருங் காமக் கிழத்திய ராக
அளப்பில் காலம் அணைந்தனன் முயங்குழி
முறைபிறழ்ந் திவரொடு முயங்குதல் ஒழிகென
அறிஞராங் குணர்த்த அஞ்சினன் ஒரீஇ
நின்னிடைப் புகுந்தனன் மன்னே என்னிடை
ஞான வல்லியை நன்மணம் புணர்த்தி
ஆறு நேயத் தரும்பொருள் வழங்கி
இறவா வீட்டினில் இருத்திக்
குறையாச் செல்வரொடு கூட்டுதி மகிழ்ந்தே!''

(சிதம்பர மும்மணிக் கோவை)

என்ற பகுதியில் சாத்திரத் துணைகொண்டு உயிர்கள் தத்துவச் சேர்க்கையினுல் எவ்வாறு பயனடைகின்றன என்பதனை உருவக முறையினுல் தெளிவு செய்திருக்கிருர். இனி, சாத்திரங் களையே அப்படி அப்படியே எடுத்தாண்ட இடங்களுமுண்டு.

''ஈண்டுனைத் தமியனேன் வேண்டுவ தியாதெனின்
அந்நிய மென்று மநநிய மென்றும்
இந்நிலை யிரண்டும் எய்திற் றென்றும்
பல்வே றுரைக்குநர் சொல்வழிப் படாது
திவ்வியம் பழுத்த சைவசித் தாந்தத்
திறவா நிலைமைபெற் றின்பமார்ந் திருக்கும்
பிறவா நன்னெறி பெறப்புரி வதுவே!''

(பண்டார மும்மணிக் கோவை)

என்றதில் அந்நியம் என்றும் அநநியமென்றும் கூறப் படுகின்ற துவைத, அத்வைத நெறிகளுக்கு அப்பாற்பட்டது சைவசித்தாந்தம் என்பதனையும், அவையெல்லாம் சொல் வழிப் பட்டன என்றும், சைவசித்தாந்தம் அனுபவ வழிப்பட்ட தென்றும் காட்டுவார், சொல்வழிப்படாது திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தத்து இறவா நிலைமை பெற்று என்று விளக்குவதனுல் அறிகிருேம். உயிர்களுக்குப் புருடன் என்று ஒரு பெயர். அதற்குக் காரணம் இருபத்து நான்கு தத்துவங் களுக்கும் தலைவனுய் நிற்பது உயிராகையால் அப்பெயர் பெற்றன. ஆனுல், இறைவனை நோக்க உயிர்கள் அத்தனையும் சக்திகளே ஆகையால் இறைவனை அனுபவிக்கின்ற நிலையில் உயிர்கள் சக்திகளாகின்றன. இறைவனுடைய பெருநிலைக்கும் உயிர்களினுடைய இழிநிலைக்கும் தலைவன், தலைவி என்ற தகுதி ஒத்தநிலையிலிராது போகிறது. இதற்குத் தொல்காப்பிய

இலக்கண அமைதி காட்டி, இந்த உயிர்களாகிய சக்திகள் இறைவனுகிய தலைவனிடத்தில் எந்தெந்த முறையில் இன்ப நுகர்ச்சி பெறுகின்றன என்பதனை அகஒழுக்க முறைப்படிச் சொற்சித்திரம் தீட்டியிருக்கிருர். சாத்திர அறிவும், இலக்கண அறிவும் மொழியறிவும் பெற்ற மூதறிஞர்கள் நினைந்து நினைந்து இன்பமடையக் கூடிய பகுதியாகுமது.

''கருவிகட்கு இறைமை காட்டுபு நிற்றலிற்
புருட நாமம் புனைந்தன மாயினும்
அத்தநிற் குறிப்பிற் சத்திகள் யாமே
புருடனைச் சத்தியிற் புணர்த்தனை அன்னதற்கு
ஒருகாட் டென்ப புருடோத் தமனே
உன்னுடன் எம்மையும் ஒப்பெனப் படுத்து
முன்னர்க் கூறிய முறைமையிற் சிற்சில
முழுவதும் ஒவ்வாது ஒழியினும் ஒழிக
உயர்ந்தோன் தலைவன் ஒத்தோட் புணரினும்
இழிந்தோட் புணரினும் இழிபெனப் படாதே
ஆதலின் யாமுனைக் காதலித் தனமாற்
காதலின் எமையருட் கைப்பிடித் தருளி
ஒருவரு முணராப் பரம வீட்டில்
இருளறை திறந்த பெருவெளி மண்டபத்
துயர்நா தாந்தத் திருமலர் அமளியிற்
புளகமெய் போர்ப்ப மொழிதடு மாற
உள்ளொளி நாதப் புள்ளொலி முழங்க
ஞானவா ரமுத பானம தார்ந்து
கருவிகள் கழன்று பரவச மாகிப்
பரமா னந்தப் பரவையுட் படிந்து
பேரா இயற்கை பெற்றினி திருப்ப
ஆரா இன்பம் அளித்தருள் எமக்கே!''

(பண்டார மும்மணிக் கோவை)

என்பது

உளதென இலதென ஒருவரொ ரளவையின்
அளவினில் அளவிடல் அரியதொ ருருவினை
இதுவெனல் அருமையின் எழுதரு மொழிகளும்
அதுவல வெனுமெனின் எவருனை யறிபவர்
அவனவ ளதுவெனும் அவைகளி னுளனலன்
எவனவன் இவனென எதிர்தரு தகைமையை
அறிபவர் அறிவினுள் அறிவுகொ டறிவுறு
நெறியல தொருவரு மறிவரு நிலைமையை

(காசிக் கலம்பகம்)

ஒன்று-உளதிலது என்ற சூத்திரத்தையும், இரண்டு—'அதுவந்து' என்று முடிக்கும் வேதப் பிரமாணத்தையும், மூன்று—'அவனவள் அதுவெனும்' என்று தொடங்கும் முதற் சூத்திரத்தையும், நான்கு-'அறிவினுள் அருளாரும் மன்னே', அம்மையோடு அப்பனுகி என்ற சித்தித் திரு விருத்தத்தையும் நினைவு கொண்டே எழுந்துள்ளமையைக் கற்றறிந்தார் நன்கு அறிவர். இப்படியாகச் சாத்திரத்து உட்பொருளைத் தெளிவு செய்து வருகின்ற பேராசிரியர் பல சமயங்களையும் அணைத்து அந்தந்தச் சமயக் கருத்துக்களும் வேதமென்றும் பெரும் அறிவு நூலில் பொதுப்படக் கூறி உள்ளதை உள்ளவாறு அறிந்து அதனுடைய பயனுய் விளைந்து அனுபவத்திற்கு உரியதாய் உள்ளது. சைவ சித்தாந்தம் என்ற உண்மையைத் தெளிவு செய்கிருர். அதனை உருவகமாக்கிக் காட்டும் திறம் மறக்காமல் நினைந்து நினைந்து இன்புறத்தக்கதாய் அமைந்துள்ளது.

> ''பல்லுயிர்த் தொகுதியும் பயங்கொண் டுய்கெனக்
> குடிலை யென்னுந் தடவய னுப்பண்
> அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
> வேதமென்னும் பாதவம் வளர்த்தனை
> பாதவ மதனிற் படுபயன் பலவே, அவற்றுள்
> இலைகொண் டுவந்தனர் பலரே யிலையொரீஇத்
> தளிர்கொண் டுவந்தனர் பலரே தளியொரீஇ
> அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
> விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
> அவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
> ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
> ஆரா வின்ப வருங்கனி பிழிந்து
> சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
> தேனமு தருந்தினர் சிலரே''

[ப மு. கோவை. 1]

எனக் கூறியுள்ளதில் பல சமயங்களும் கூறுவது ஒரு பொருளையே யென்றும் அவற்றுள் ஒவ்வொன்றும் வளர்ச்சி நிலைக்கேற்ப வகுத்துக் கொள்ளப்பட்டன என்றும் வேதாந்தம் என்னும் உபநிடதங்களில் கூறப்பட்டிருக்கின்ற உண்மைப் பயனே சைவ சித்தாந்தம் என்றும் காட்டுவான் தொடங்கி இலையும், தளிரும், அரும்பும் மலரும் பிஞ்சுங் காயும் என ஆறு உறுப்புக்கள் எடுத்து அறுவகைச் சமயத்திறத்தை உருவகப் படுத்திக் கனியாக வேதாந்தத்தைக் கூறி அதன் சுவைப் பயனுகச் சைவ சித்தாந்தம் அமைந்துள்ளது என்று ''வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறனிங்கு விரிக்க

லுற்றும்'' என்ற சிவப்பிரகாச திருவிருத்தத்தை நினைவு படுத்துவது போன்று அமைந்துள்ளமையை நாம் அறிந்து மகிழலாம். வேதத்திற்குப் புறம்பான சமயங்கள் பொருளையே அறிவதில்லை என்றும், வேதத்திற்கு உட்பட்ட சமயங்கள் பொருளைப் பல பல நிலையில் அறிகின்ற என்றும், வேதப் பயனும் உள்ள உபநிடதங்களே உண்மையை உணர்த்துவன என்றும், அந்த உண்மைப் பயனைச் சைவ சித்தாந்தம் கூட்டி வைக்கிறது என்றும் காட்டும் முடிவு

''புறச்சமயத்தவர்க்கு இருளாய் அகச்சமயத்து ஒளியாய்
புகல் அளவைக்கு அளவாகி ''

விளங்குவது சைவ சித்தாந்தம், என்பதனைத் தெளிவு படுத்துகிறது. உயிர்கள் இறைவனுடைய அருட்பேற்றை அடைவதற்கு இறைவன் வகுத்த வழி, உலகம் தோன்றின முறை, உயிர்களின் வளர்ச்சிக்கு அமைந்திருக்கின்ற வரலாறு சைவ சித்தாந்த மரபு வழி, பல நூல்களைக் கொண்டு தெளிவு பெற வேண்டிய ஒன்றை மிகச் சுருக்கமாக, மிக அழகாக அடிகளார் காட்டும் அருமைப்பாடு, சைவ மெய்யன்பர்களுக்குத் தெவிட்டாத தேனமுதமாகத் தித்தித்திருப்பதைப் பின் வரும் பகுதியால் உணரலாம். அதனை ஆசிரியர் விதையைக் கொண்டு விளைவு செய்கின்ற உழவன், அந்த விதையின் விளைபயனைக் கருதி உழவுத் தொழிலைச் செய்யுமாறு போல உயிர்களாகிய விதைகள் பயன் பெறுதற்கு இறைவனாகிய உழவன் விளைவு செய்கிறுன் என்று காட்டுகிறுர்.

''முற்படு மாயை முதற்கரை நாட்டிற்
பற்பல புவனப் பகுதி பற்றி
ஈரிரு கண்ணுற் றெழுதரம் வகுத்த
ஆறே ழிரட்டி நூரு யிரத்த
செயற்படு செய்களி னுயிர்ப்பயி ரேற்றி
ஊழெனப் பட்ட தாழ்புனற் படுகாற்
றெய்விக முதலாச் செப்புமும் மதகும்
ஒவ்வொரு மதகா யுடனுடன் றிறந்து
தாக மென்னுந் தனிப்பெருங் காலிற்
போக மென்னும் புதுப்புனல் கொணர்ந்து
பாயுமைம் பொறியாம் வாய்மடை திறந்து
பருவம் பார்த்து வரன்முறை தேக்கலும்
இதத்துட னகித மெனுமிரண் டூற்றிற்
புதுப்புனல் பெருகிப் புறம்பலைத் தோட
வார்புன லதனை மந்திர முதலா

ஓரறு வகைப்படு மேரிக ணிரப்பி
விளைவன விளைய விளைந்தன வறுத்தாங்
கொருகளஞ் செய்யு முழவணுகி''

[ப. மு. கோவை. 11]

சிவஞான சித்தியார் விரித்துப் பேசுகின்ற ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களும் உயிர்களினிடத்தில் எப்படிப் பரிபாகம் அடைகின்றன என்பதனை வகை செய்து மாயையும், கன்மமும் உயிர்களுக்குப் பக்குவப் படுத்தும் துணையாய் அமைந்து ஆணவ மல பரிபாகத்திற்கு அழைத்துச் செல்கிறது என்ற பேருண்மையை உருவக முகத்தான் இலக்கியமாக்கிச் சுவைபட உணர்வதற்கும், அளவை முறையால் உண்மை என்று தெளிவதற்கும் அமைத்துக் கொடுத்திருக்கிறார். இந்த நிலையில் வளர்ந்து வாழ்வைப் பெறுவதற்கு மால் அர நேயம் மலிந்தவர் வேடத்தைச்சிவனெனவே தொழ வேண்டும், அதுவே இறைவனுடைய திருவடிப் பேற்றிற்குச் சிறந்த சாதனம் என்று பயனில் பன்னிரண்டாம் சூத்திரத்தின் உட்பொருளைத் தெளிவு செய்வார் போல அவர்

''நன்னிலை பெறுதற் கன்னிய ருயினும்
அன்னவர் கமலப் பொன்னடி விளக்கியத்
தீம்புன லமுத மார்ந்தன னதனுல்
வேம்பெனக் கொண்டனன் விண்ணவ ரமுதே,''

[ப. மு. கோவை 11.]

எனக் குறிப்பிடுகிறார்.

# குமர குருபரர் தமிழ்நலம்

தீந்தமிழ்த் தெய்வத்திருநாட்டில் தோன்றிச் சைவமுந் தமிழும் வளர்த்த ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோருள் ஒப்பற்றவர் திருமுருகன் அருள் நிறைந்த குமர குருபர சுவாமிகள். பரந்துபட்ட இவர்தம் இலக்கியக் கோவைக்குள் தமிழ் நலமும், பேரழகும், நனி சுவையும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

துங்கமிகு சங்கப் புலவர்தம் நூற்கள் போலவும், பின் வந்த பெரும்புலவர்தம் நூற்கள் போலவும் குமர குருபரரின் தெய்வ நலங்கனிந்த நூற்கள் தனித்தன்மை வாய்ந்தவை. சொற்கள் பேசுவோர்க்கும் புலவர்க்கும் பொது. பொருள் தொடர்பாய்ச் செய்யுள் அமைகின்ற காலத்து மொழி அழகு பெறுகிறது; சுவை தருகிறது. தமிழ், குமர குருபரரின் மொழித் திறனுல் அழகு பெற்ற நடையும், அருஞ்சுவையும் பயப்பதாய்க் கற்போரையும் கேட்போரையும் ஈர்க்கின்ற ஆற்றல் உடையதாய் விளங்குகிறது. அவரவர் அறிவுத் திறனுக்கும், மொழிப் பயிற்சிக்கும் ஏற்பத்தான் சொற்ருெடர் அமையும் என்பது அனைவரும் அறிந்ததொன்று. குமர குருபரரின் அறிவு நலஞ் சான்ற பெரும் புலமையால், மொழி வளப்பத்தால் இலக்கியச் செய்யுள் இன்ப ஓசை நிறைந்ததாய் கற்கக் கற்கச் சுவை நனி பயப்பதாய், நினைந்து நினைந்து நெஞ்சுவக்கும் பான்மையதாய் விளங்குதல் அங்கை நெல்லி யாம்.

மொழியின் ஒலிநயம், புலவரின் மொழி வேட்கை, மொழியைப் பற்றிப் புலவர் எடுத்துக் காட்டும் சிறப்பியல்புகள் என்ற மூன்று பகுதிகளாகத் தமிழ்நலம் என்ற தலைப்பைப் பிரிக்கலாம்.

**ஒலிநயம்:—**

மொழிக்கு அழகு செய்வதில் ஒலியும் ஒன்று. குமர குருபரரின் தீந்தமிழ்த் தெய்வப் பாக்களின் ஓசையே செவிக்கும், உள்ளத்திற்கும் தேன் பாய்ச்சுவதாய்க் கருங்கல் மனத்தையும் கரைத்துருக்கும் தன்மையதாய் விளங்குதல் வெள்ளிடைமலை. ஆதிபுராணனுய் நின்ற இறைவனே பண்ணுர் இசையின் சொல் கேட்டும், ஓவாதசத்தத்து ஒலியாயும் விளங்குபவன் அல்லனே! குமர குருபரரின் பாடல்கள் பொருள் நிறைந்த இனிய ஓசை உடையன.

(உ-ம்) நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமி ழுண்டு நயந்தசில
பாவுண் டினங்கள் பலவுமுண் டேபங்கிற் கொண்டி
ருந்தோர்
தேவுண் டுவக்குங் கடம்பா டவிப்பசுந் தேனின்
பைந்தாட்
பூவுண்டு நாரொன் றிலையாந் தொடுத்துப் புனைவ
தற்கே'

என்ற மீனுட்சி அம்மை இரட்டை மணிமாலைப் பாடல் ஓசை நயம் மிக்குள்ளமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாம். நேரசை முதலாகிய இக் கட்டளைக் கலித்துறையின் ஓசை நயம் பாடி மகிழுதற்குரியது.

"உலகு குளிர எமது மதியி லொழுகு மமுத கிரணமே
உருகு மடிய ரிதய நெகிழ வுணர்வி லெழுந லுதயமே
கலையு நிறையு மறிவு முதிர முதிரு மதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே
அலகில் புவன முடியும் வெளியி லளியு மொளியி னிலயமே
அறிவு ளறிவை யறியு மருவ மறிய வரிய பிரமமே
மலையின் மகள்கண் மணியை யனைய மதலை வருக வருகவே
வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன் வருகவே!"

என்ற முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ்ப் பாடலின் சந்தம் சித்தத்தில் இனிக்கின்ற தெள்ளமுதாய் இனபம் செய்தல் காண்க.

மொழி வேட்கை:—

தமிழ் பண்டைப் புலவர் பெருமக்களாலும் தேவாரம் பாடிய மூவராலும் ஒரு வாசகமாம் திருவாசகத்தை இயற்றிய மணிவாசகப் பெருமானுலும், தீந்தமிழ், செந்தமிழ், வண்டமிழ் ஒண்டமிழ், பைந்தமிழ், ஒண்டீந்தமிழ், தெய்வ ஒண்டீந்தமிழ் எனவும் பாராட்டப்பெறும் சிறப்புடையது. அத்தகைய தமிழிடத்தில் குமர குருபர சுவாமிகள் வேட்கை கொண்டிருத்தலில் வியப்பொன்றுமில்லை. இவர்தம் பரந்துபட்ட பாடல் தொகையின் பலவிடங்களில் மொழி வேட்கையினைப் புலப் படுத்துகின்றார்.

கந்தர் கலிவெண்பாவின் இறுதியில் இறைவனிடம்
''ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்—ஓசை
எழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை''
பாலிக்குமாறு வேண்டுகின்றார்.

நாற்கவியாவன:- ஆசு மதுர சித்திர, வித்தாரமாம். அட்டாவதானமாவது ஒரே சமயத்தில் எட்டுவகை வினாக்களுக்கு விடையளித்தலாம். எழுத்துமுதலாம் ஐந்திலக்கணமாவன எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவாம்.

சகலகலாவல்லி மாலையின் கண்ணும்,
''நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்''

என்றும்,
''சொல்விற் பனமும் அவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே''
என்ற பாடலில் நாற்கவியும், அவதானம் முதலியவற்றையும் விரும்பித் துதிக்கின்ற தன்மையினைக் காணலாம்.

தமிழில் இவருக்கு இருக்கின்ற வேட்கை அளவிடற் கரியது. இறைவன்பால் அன்பையும், அன்பர் தொடர்பையும், துறவுள்ளத்தையும் வேண்டுகின்ற இவ்வாசிரியர் உலகியற் பொருள்களில் எதனையும் விரும்பவில்லை. ஆயினும் சொல்விற் பனமும், கவிசொல்லவல்ல நல்வித்தையும் வேண்டுமென்ற வேட்கை மட்டும் இவரை விடவில்லை.

கலைமகளிடம்,

*பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்*
*எண்ணும் பொழுதெளி தெய்தநல் காய்''*
எனவும்,
*பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்*
*கூட்டும் படிநின் கடைக்கணல் காய்''*
எனவும்,
*''சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல*
*நல்வித்தை யுந்தந் தடிமை கொள்வாய்''*
எனவும்,

வேண்டுகின்றமையால் இவர் தமிழ் மீது கொண்டுள்ள அளப்பரிய காதல் புலனாகின்றது.

மீனாட்சியம்மையைத் தொடுக்குங் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனாகக் கூறிப்பின் நறை பழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ் சுவையாகவும் உரைத்தார்.

*''மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழில் கலைமகளைத்*
*துறை த்தமிழொடும்'*
*தொன்மறை தெளிக்குங் கலைக்கொடி''*

எனவும் கூறிச் சகல கலா வல்லி மாலையில்,

*''தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த*
*கல்வியும் சொற்சுவைதோய்*
*வாக்கும் பெருகப் பணித்தருள்*
*வாய்வட நூற்கடலும்*
*தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்*
*தொண்டர்செந் நாவினின்று*
*காக்குங் கருணைக் கடலே*
*சகல கலாவல்லியே''*

எனவும் வேண்டுகின்றமையாலும் ஆசிரியரின் மொழிவேட்கை நன்கு தெரிகிறது.

## சிறப்பியல்புகள்.

மொழியினை நலஞ் செய்யும் அதன் சிறப்பியல்புகளைப் புலவர் பெருமான் பல இடங்களில் எடுத்துக் காட்டிச் செல்கிறார்.

தமிழில் ஒருவர் என்ற சொல் பாற்பொதுமையினைச் சுட்டிநிற்கும். நன்னூலாரும்.

*''ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப்*
*பன்மை வினைகொளும்பாங்கிற் றென்ப''*

என நூற்பா இயற்றினார். சிதம்பரச் செய்யுட் கோவையில் இக்கருத்தினைச் சிறப்பாக அமைத்து,

*''அருவருக்கும் உலகவாழ் வடங்க நீத்தோர்க்*
*கானந்தப் பெருவாழ்வாம் ஆடல் காட்ட*
*மருவருக்கன் மதிவளிவான் யமானன் தீநீர்*
*மண்ணெனுமெண் வகையுறுப்பின் வடிவுகொண்ட*

ஒருவனுக்கு மொருத்திக்கும் உருவொன் றுலவ்
வுருவையிஃ தொருத்தனென்கோ வொருத்தி என்கோ
இருவருக்கு முரித்தாக ஒருவர் என்றோர்
இயற்சொலில தெனின்யான்மற்றென்சொல்கேனே''

என்று எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் உரைக்கின்ற திறன் எண்ணி எண்ணி வியத்தற்குரியது. எண்வகை உறுப்பின் வடிவு அட்டமூர்த்தம். அவை பூதம் ஐந்தும் ஞாயிறுந் திங்களும் ஆன்மாவும் ஆம். இவற்றை உடைய ஒருவன் சிவபெருமான். சிவ பெருமானுக்கும், உமாதேவியாருக்கும் உருவொன்று என்பதை 'ஒன்றேயுடம்பங்கிரண்டே யிடும்பங்கு' என மதுரைக் கலம்பகத்திலும் உரைத்தார். இறைவனுக்கும் இறைவிக்கும் உருவொன்று தமிழில் இருவருக்கும் உரித்தாக 'ஒருவர்' என்றோர் இயற்சொல் இலதெனின், இறைவனும் இறைவியும் ஒன்றுயுள்ள உருவினை ஒருத்தன் என்பதோ, ஒருத்தி என்பதோ என்று கூறுகின்ற நயம் போற்றற்குரியது. இறைவனுக்கும் இறைவிக்கும் திருவுரு ஒன்றே என்பதை,

''செவ்வாய்க் கருங்கட்பைந் தோகைக்கும் வெண்மதிச்
சென்னியற்கும்
ஒவ்வாத் திருவுரு வொன்றே யுளதவ் வுருவினைமற்
றெவ்வாச் சியமென் றெடுத்திசைப் பேமின்
னருட்புலியூர்ப்
பைவாய்ப் பொறியர வல்குலந் தாயென்று பாடுதுமே!''

என்ற நேரசை முதலாகிய கட்டளைக் கலித்துறைப் பாடலிலும் கூறினர். இப்பாடலின் முதலடி முரணடுக்கி வந்தமையால் வழி முரண் ஆம். இதன் நான்காம் அடியின், ''பைவாய்ப் பொறியரவல்குல் எந்தாய்'' என்பது 'அரவு போன்ற அல்குலையுடைய எம் தாயே' எனவும் ''அரவையணிந்த அல்குலையுடைய எம் தந்தையே'' எனவும் சிலேடையாய்ப் பொருள்படும். 'எந்தாய்' என்ற சொல் இருபொருள் தந்து இறைவனுக்கும் இறைவிக்கும் வடிவு ஒன்று என்பதனைக் காட்டி நிற்கும் சிறப்பு போற்றற்குரியது; எண்ணி மகிழுதற்குரியது. இவ்வாறு பற்பல இடங்களில் குமர குருபர சுவாமிகள் மொழியின் சிறப்பியல்புகளை எடுத்துக் காட்டிச் செல்கின்றார்.

தமிழிடத்தே குமர குருபர சுவாமிகள் தெய்வத் தன்மையினைக் கண்டனர். 'தெய்வத் தமிழ்க் கூடல்' என்று மதுரைக் கலம்பகத்திலும், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிலும் பாராட்டுகின்றனர். தாம் பாராட்டும் தெய்வங்களையெல்லாம் தமிழ்த் தொடர்பும் தமிழின்பால் வேட்கையும் உடையவர்களாகக் கூறுகின்றனர். முத்தமிழுக்குச் சிவபெருமானே பயனாக உள்ளார் என்பது இவர் கொள்கை. இதனை மதுரைக் கலம்பகத்தில்,

''பண்முத் தமிழ்க்கொர் பயனே சவுந்தர பாண்டியனே!''
என்று பாடுகின்றார்.

6676

மீனாட்சி அம்மையை,

*முதுதமி ழுததியில் வருமொரு திருமகள்*
*முத்தம ளித்தருளே*
*முழுதுல குடையவொர் கவுரியர் குலமணி*
*முத்தம ளித்தருளே''* என்று பாடுகின்றார்.

முருகக் கடவுளைத்,

*''தோலாத முத்தமிழ் நாவா மூவா, மாவாமச்*
*சூரவே ரறத்தொடு வேலா நூலா* என்றும்,
*''தெளிதமிழில் வடித்திடு நவரசமே''* என்றும்,
*தண்ணொளி பொங்கிய கருணை நிதியே*
*தாலோ தாலேலோ*
*சங்கத் தமிழின் தலைமைப் புலவா*
*தாலோ தாலேலோ''* என்றும்,

தமிழோடு தொடர்புபடுத்திப் பாடி மகிழுகின்றார் இம்முனிவர். திருமாலைப்,

*''பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப்*
*பணைத்தோள் எருத்தலைப்பப்*
*பழமறைகண் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற*
*பச்சைப் பசுங்கொண்டலே!''*

என்றும்

கலைமகளை,

*...........மதுரமொழுகும்*
*கொழிதமிழ்ப் பனுவற் றுறைப்படியு மடநடைக்*
*கூந்தலம் பிடி''* எனவும் பாடுவர்.

சிவபெருமான் சுந்தரேசராகவும், அம்மை தடாதகைப் பிராட்டியாராகவும், முருகக் கடவுள் உக்கிர குமாரராகவும் அவதரித்ததற்குக் காரணம் அம் மூவருக்கும் தமிழினிடத்துள்ள வேட்கையே என்று கூறுவர். இதனை மதுரைக் கலம்பகத்தின்கண்,

"தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றுள்
தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவுந் தனிமுத லொரு நீ
சவுந்தர மாறனு னதுவும்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்"

என்று புலவர் பெருமான் பாடிப்பாடி வியக்கின்ற தன்மையினைக் காணலாம்.

இவருடைய தமிழன்பு தமிழை எல்லை கடந்த நிலையிலும் அமைத்துவிடுகின்றது. வண்டு கூடத் தாமரைப் பொய்கையினின்று தமிழ்ப்பாடல் இசைக்கின்றதென்பதை முத்துக் குமார சுவாமி பிள்ளைத்தமிழில்,

"மழலை வண்டுதட மலர்கு டைந்துபுது
மதுவ ருந்திநறு மல்லிகைச் சேக்கையின்
வடிப சுந்தமிழி னிசைப யின்றபெடை
யொடுது யின்றினிய செவ்வழிப் பாட்டினை
வருவி பஞ்சிபயி றரும தங்கர் தெரு
மரமு ரன்றுநெடு வைகறைப் போய்ச்செழு
மலரி லஞ்சிதொறு முலவு கந்தபுரி......"

என்று பாடுகிறார்.

இவர் தம் நூற்களில் பல இடங்களில் தமிழின் சிறப்பைப் புலப்படுத்தும் தொடர் மொழிகளை அமைத்துள்ளார். சகல கலா வல்லி மாலையில் 'செழுந்தமிழ்த் தெள்ளமுது' எனவும், பண்டார மும்மணிக் கோவையில் 'சொற்சுவை பழுத்த தொகைத் தமிழ் எனவும், மதுரைக் கலம்பகத்தில் "தருசுவை அமுதெழ மதுரம தொழுகு பசுந்தமிழ்" எனவும், "தலைச்சங்கம் பொங்கும் பண்முத் தமிழ்" எனவும், முத்துக் குமார சுவாமி பிள்ளைத் தமிழில்,

........ தீஞ்சுவைக் கனியும்
தண்டே னுறையும் வடித்தெடுத்த
சாரங் கனிந்தூற் றிருந்தபசுந் தமிழ்" எனவும்,

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில், 'தேக்கமழ் மதுரமொழுகிய தமிழ்' எனவும், மதுரைக் கலம்பகத்தில், 'புத்தமிழ்தம் வழிந்தொழுகுந் தீந்தமிழ்' எனவும், மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழில், 'முதுசொற்புலவர் தெளித்த பசுந்தமிழ்' எனவும், காசிக் கலம்பகத்தில், 'விரைத்தேன் பில்குந் தேத்தமிழ்' எனவும் பாடித் தீந்தமிழின் சிறப்பினைப் புலப்படுத்துகின்றார்.

இவ்வாறு குமரகுருபர சுவாமிகள் தமிழின் நலமுணர்ந்து தமிழ்மாலை புனைந்து உவக்கின்றார்.

AUP

## பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள

## பெருநம்பாள் சொற்பொழிவு நூல்கள் :

இளங்கோ அடிகள்
டாக்டர். மு. வரதராசன்

திருவள்ளுவர்
டாக்டர். தனிநாயக அடிகள்

கொங்குவேளிர்
சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்

சிலப்பதிகாரம்
பொ. திரிகூடசுந்தரம்

கம்பர்
டாக்டர். வ. சுப. மாணிக்கம்

சேக்கிழார்
டாக்டர் மா. இராசமாணிக்கம்

திருநாவுக்கரசர்
சரவணை. ஆறுமுக முதலியார்

வாலிவதை
கோ. சுப்பிரமணிய பிள்ளை

கம்பரும் மெய்ப்பாட்டியலும்
கு. கோதண்டபாணிப் பிள்ளை

நக்கீரர்
ச. தண்டபாணி தேசிகர்

மாணிக்கவாசகர்
அ. ச. ஞானசம்பந்தம்

சாத்தனார்
அ. மு. பரமசிவானந்தம்